கடவுள் துணை.

கடவுள் துணை.

அகத்தியமகாமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

வைத்திய

இரத்தினச்சுருக்கம்

முந்நூற்றறுபது.

இஃது

குயப்பேட்டை

வீ. இராஜுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

பி. நா. சி. கடைகாரியம்,

மு. கிருஷ்ணப்பிள்ளையவர்களால்

பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

இதன் விலை] [அணா—5.

ரிங்வோரங் கியூர் என்னும்

படை சங்காரன்.

ஐயா, உம்முடைய தேகத்தில எந்த பாகத்திலாவது மேகப்படைகள் அல்லது பெண்களுடைய தேகத்தில் எவ்வித படைகள் இருந்தாலும் எமது (படை சங்காரன்) என்னும் ஔஷதத்தில் போதுமானது எடுத்து படையுள்ளயிடத்தில் தடவி நன்யருத்தேய்த்து மூன்றுமணிநேரம் பொருத்து சோப்பு அல்லது சீக்காய்போட்டுதேய்த்து அலம்பிவிடவும். இதுபோல இரண்டு மூன்றுவேளை மேற்சொன்னபடி செய்தால் நல்ல குணத்தைக் காணலாம். இந்த மருந்தினால் அனேக ஜெனங்கள் சுகமடைந்திருகிறார்கள்.

ஒரு புட்டியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா தபால்ஸ்டாம்ப் அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

மதராஸ்.

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

வைத்தியரத்தினச்சுருக்கத்தின்

அட்டவணை.

பெயர்.	பக்கம்.
அக்கினிசூரணம்	௨௧
அசுவகெந்திசூரணம்	௨௨
அசுவகெந்திபலராட்சதத்தைலம்	௨௫
அப்பிரேகசெந்தூரம்	௪௪
அயக்காந்தசெந்தூரம்	௪௪
அர்த்தனாரீஸ்வரம்	௰
ஆக்கிராணநசியம்	௬௩
ஆதண்டத்தைலம்	௩௧
இதுவுமொருவகை	௭
இரசசிந்தாமணி	௯
இரசபற்பம்	௪௮
இராசானந்தவைரவம்	௯
ஏலாதிசூரணம்	௨௫
கணத்தெண்ணெய்	௩௭
கண்டாத்திரிலேகியம்	௧௭
கண்டங்கத்திரிலேகியம்	௧௮
கண்டங்கத்திரிலேகியம்	௧௭
கண்டங்கத்திரிகிருதம்	௩௭
கண்டாத்திரிசூரணம்	௨௨
கண்டாவிழ்தம்	௭௩
கபாடமாத்திரை	௪
கபாடலேகியம்	௰
கரப்பானெண்ணெய்	௩௮
கரிசாலைஇலேகியம்	௧௧
கலிங்காதிஎண்ணெய்	௰
சன்னிபதின்மூன்றுக்கும்பெயர்	௫௪
காரீயச்செந்தூரம்	௫௮
காளகண்டமேகநாராயணசெந்தூ	௫௯
கிழ்க்காய்நெல்லித்தைலம்	௩௧
குமரித்தைலம்	௨௭
கூழ்பாண்டக்கிருதம்	௧௯
கூழ்பாண்டக்கிருதம்	௩௫
கெந்திசெந்தூரம்	௨௫
கொம்பரக்குதைலம்	௩௮

பெயர்	பக்கம்.
கோரோசினைக்குளிகை	௰
சஞ்சீவிசூரணம்	௨௪
சந்தனாதித்தைலம்	௨௯
சரபங்கவில்வாதிலேகி	௧௯
சவுபாக்கியசுண்டி	௨௰
சித்தார்த்தவைரவம்	௫
சிலோதாரிமணி	௧௧
சித்தாதிலேகியம்	௧௪
சுகசீதபேதியெண்	௪௨
சுயமக்கினி	௭
சூரணங்களின்சுத்தி	௪௭
செந்தூரவைப்புக்குரு	௬௪
சேத்துமசுரக்கியாழம்	௫௪
தங்கபற்பம்	௫௧
தாம்பிரபற்பம்	௫௰
தாளகபற்பம்	௬௯
தாளிசப்பத்திரிசூரண	௨௨
திப்பிலிரசாயனம்	௧௯
திரிராட்சதசூரணம்	௨௧
திரிலோகசெந்தூரம்	௬௫
துருக்குரு	௪௮
தூதுவளைக்கிருதம்	௩௯
தோஷமேழுக்கும்பெயர்	௫௧
ஸ்திரீபுருஷர்களுக்குநாடிபாக்கும் வகை.	௫
நசியம்	௬௩
நாகபற்பம்	௪௯
நாடிநிதானம்	௧
நாடிபார்க்குங்காலம்நாடியிலக்கம்	௩
நாடிபாக்கும்மாதிரிவகை	௫
நிலப்பனைக்காருதம்	௩௩
நிலாவாகரச்சூரணம்	௨௩
பஞ்சதீபாக்கினிலேகியம்	௧௭
பஞ்சதீபாக்கினிசூா	௨௩

வாதத்தின்வாதமாகில் வளர்ந்திடுமென்னம்போல
நீதுய்த்தவுடலினேர்ந்து நெகிழ்ச்சியாய்ச்சுருக்கம்வாங்கும்
ஆதுற்றுப்பதறுமேனி யசனமுமற்பமாகும்
எதுற்றதனத்தின்பின்னே யெண்ணியேயறிந்துசொல்லே. ௪

வாதத்திற்பித்தமாகில் வாயதுகுழறிப்பேசும்
பேதித்துத்தலையிடித்துப் பிணங்கியகுணங்கள்வேறாய்த்
தாகுற்றபுத்திதானுந் தடைப்படுத்தடங்கண்மாதே
கோதுற்றவயிறுவிம்மிக் குடரணைப்புரட்டுந்தேனே. ௫

வாதத்திற்சேத்துமமாகில் வலியொடுவீக்கமுண்டாம்
போதிக்குத்தலையிடித்துப் பிணங்கியகுணங்கள்வேறாய்த்
தீதுற்றமெய்வெளுத்துத் திடமுடனசனஞ்செல்லா
பேதித்துநாவும்பேசும் பெருகவேவீக்கமுண்டாம். ௬

பித்தத்திற்பித்தமாகிப் பிதற்றிடுங்கிறுகிறுக்கும்
சத்தியமதிகமாகுஞ் சரீரத்திலிளைப்புமுண்டாம்
அத்தியாயுலகுமேனி யாகமும்வேறதாகும்
வற்றியேவெளுத்துக்காயம்வறண்டுபின்வீக்கமுண்டாம். ௭

பித்தத்தில்வாதமாதிற் பிடரியங்காலுங்கையுங்
குத்தத்துப்போலேயாகுங் குறுகியேமெய்ப்பதறும்பின்னே
அத்தியாயுலகுமேனி யாருகஞ்சுகத்தால்நோவாம்
புத்தியுமடியுமிந்தப் பொறுமைபோய்க்கோபமாமே. ௮

பித்தத்திற்சேத்துமமாகிற் பிதற்றுவாய்குழறுமிக்கச்
சத்தியும்வாய்நீர்தானுந் தானறியாமலோடு
சுற்றிடும்பேய்கள்போலச் சுழற்றியேவயிற்றினோடும்
பித்தமுமெடுத்துக்கொட்டிப் பிடரியில்நோவதாமே. ௯

வாட்டிடுஞ்சேத்துமத்தில் வந்திடுவாதமாகில்
நாட்டியகால்கள்போல நரம்யெல்லாம்வலித்துநிற்கும்
கூட்டியபிடரிதானுங் குன்றவேவலிக்குமாகில்
நாட்டியவிழியுமெல்லாம் நாக்குவாய்குழறுந்தானே. ௰

சீர்பெறுசேத்துமதத்தங் தின்பதுகசப்புண்டாகும்
பார்பெறுநாவுதன்னிற் பலவிதம்புளிபுளிப்பாம்
சேர்ப்பதுபேசுமாறுந் திடமில்லைகோழையாகும்
சாபதுகண்ணும்பீளை சாரும்பின்சுத்தம்வேறாம். ௧௧

சேத்துமத்திற்சேத்துமமாகிற் றிமிதயமாயறியுஞ்சொன்னோம்
ஆத்துமநல்லதல்ல வழிவதுமெய்கண்டாயே

கூற்றன்வந்திடிவதாகுங் குறுவிழிவட்டங்கொள்ளும்
சாத்திரமறிந்துசொன்னோம் யாத்திரைநாடிதானே. கஉ

நாடிபார்க்குங் காலம்.

காலமேசேத்துமநாடி கட்டுச்சிபித்தநாடி
மாலையில்வாதநாடி வகைதப்பிபதறிநின்றால்
ஏலவேயிவர்கட்கெல்லா மியங்கிறரிதுதானென்று
காலஞ்சின்மரணமென்று நன்முனியருளிச்செய்தார். கந

நாடி இலக்கணம்.

போற்றியநாடித்தானும் போத்துபோற்புறந்துடித்தால்
சீற்றுவின்னுதலேமிக் கிடுஞ்சுகமானேகேளாய்
காத்திடுந்திங்களொன்றிற் கருதியேதீராவிட்டால்
மாற்றியமாதம்பத்தின் மரணமென்றுரைக்கலாமே. கச

குறித்திடுஞ்சேத்துமநாடி குதிரைபோல்திமிர்ந்துநின்றால்
கறுத்திடுவிழியாம்நல்ல காரிகையாளேகேளாய்
மறுத்திவைபேசவேண்டாம் வயதிவைமுடிந்ததென்று
பொறுப்பில்லைதிங்களொன்றிற் புகன்றிடுமரணமாமே. கரு

ஆதித்தன்சந்திரன்போ லந்தித்தநாடிதானும்
பேதித்துநிற்குமாகிற் பெருக்கவேவகையினூடே
சேதித்துக்கண்டுநாடி சுரங்களிற்புக்குமாகில்
வாதத்தில்வாய்வுபீடை வந்துற்றுநிற்குந்தானே. கசா

கடிந்தமேதோர்நாடிதன்னைக் கருதியேபார்க்கும்போது
விடிந்தபின்சேத்துமநாடி வுதறியேதொடர்ந்துநின்றால்
கடிந்ததுபித்தநாடி கட்டுச்சிதுடிக்குமாகில்
மடிந்ததுவாதநாடி மாலையில்மரணந்தானே. கஎ

சேத்துமநாடிதானுந் தியங்கியமஞ்ஞைபோல
நாட்டியேவட்டைபோல நடுங்கியேபதறிநின்றால்
கூட்டவேண்டாமெழு நாளின்னமரணங்கொள்ளும்
நாட்டமாய்முனிவர்சொன்னார் நயம்படக்குறித்துப்பாரே. கஅ

ஏற்றியேதீபந்தன்னி லெரிசுடர்முனையைப்போலத்
தோற்றியநாடிதானுந் துயரநடக்குமாகில்
கூற்றனுக்கிடமுமில்லை குறைபடாமருந்துசெய்யில்
மாற்றியவாணுடானும் வளர்ந்திடுந்திண்ணந்தானே. கசு

வேறு.

கண்ணும்பல்லுந்தான்கருத்துக் கருதுமூச்சுவாய்திறந்து
உண்ணும்வயிற்றிற்சேத்துமமு மோடிமிகவேதானடந்தால்
பண்ணுமருத்துபலியாது பண்பாய்ச்சுவாசமேல்வாங்கும்
மண்ணும்விண்ணுந்தானறிய மரணமாவார்கண்டீரே. ௨௰

வேறு.

இடைகொடைமார்பின்கீழே யெரிபடப்பதறியோடின்
மூடுகிடவீங்குமாகின் மூவரிலொருவரோடில்
படரவேதாரமிஞ்சிப் பஞ்சிடுங்கண்ணுவாயும்
அடாவிக்குணங்கள்கண்டா லறிந்துகொள்மரணமென்றே. ௨௧

இஃதறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

எடுக்கும்படுக்குமெழுந்திருக்கு மிளைத்தேமூச்சுதலைவாங்கும்
வடுக்கனைத்தவிழியிரண்டு மலரவிழிக்கும்வழிபார்க்குந்
தொடுக்குந்தொடுத்தசேத்துமமுந் தொண்டைதன்னையடைப்பிக்கு
மடுத்துவருவதுகண்டலறி மடிவீர்மரணநிச்சயமே. ௨௨

இதுவும் அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஊசிபோன்முகமுநீண்டு உடம்பெலாநரம்பதோன்றும்
பாதிபேசுநாவறண்டுபேசிடும் பரந்திருண்மூடுமாகில்
பேசுநாவறண்டுபேசிப் பித்ததுபிதற்றுமாகில்
காசினியறியச்சொன்னேங் கண்டுகொள்மரணமென்றே. ௨௩

நாடியான்முன்னேர்சொன்ன நற்குறிக்குணங்களாலு
நீடியவிழியினாலு நின்றநாட்குறிப்பினாலும்
வாடியமேனியாலு மலரொடுநீரினாலுஞ்
சூடியவியாதிதன்னைச் சுகம்பெறவறிந்துசொல்லே. ௨௪

சுகம்பெறவங்கமெல்லாஞ் சுருக்கியகுணங்களாய்ந்து
முகங்குறிநாடிமூக்குச் செவிநுதலயனநாடி
அகந்துடிபடக்குநாடி யதுதிசைவிடுதிநாடி
உகந்துடியுந்திநாடி யுண்மைபாய்நடைகள்பாரே. ௨௫

பார்மனக்கவலையற்றும் பலபலவிசாரம்விட்டுத்
தோர்மனந்தெளிந்துநீயுஞ் செல்குணவழியிதென்று
ஊரகமுந்திதன்னி தொளிபலவியாதிசெய்யில்
நீபனவுண்டியாலே சேர்ந்திடுநோய்கடானே. ௨௬

சொல்லியவுந்திதன்னிற் சுழித்ததோரெழுத்தைப்பற்றி
வல்லையிலெழுந்தநாடி யெழுபத்தீராயிரத்தில்
வல்லவர்புகலுநாடி பத்ததிலேழுநீக்கி
நல்லதோர்நாடிமூன்று நயந்துநீயறிந்துபாரே. ௨௭
தான்மிகக்குளிர்ச்சிகொள்ளி லறங்கியநாடிவாதம்
மீன்முகில்குழலாய்நெய்பா னிறைச்சிகளுண்டால்வாதந்
தீன்மிகவருமேகோழி தின்னவாநாடிபித்தம்
வானநற்கனிகடன்னை வாங்கினால்வாதமாதே. ௨௮
வாதத்திலிளநீர்பின்னை வாங்கினானாடிவாதம்
போகவேகோபமுள்ளே பொருமினானாடிபித்தம்
கோதேசேர்குழலாள்தன்னைக் கூடினானாடிபித்தம்
தீதிலாமுனிவர்சொன்னார் திறமுடனறிந்துதானே. ௨௯

ஸ்திரீ புருடர்களுக்கு நாடிபார்க்கும்வகை.

தானெனவுலகத்துள்ளே தயங்கியநாடிபார்க்கில்
வானெனுமின்னேகேளாம் வரும்புனல்சொல்லக்கேளு
நானெனுபுருடர்க்கெல்லா நாடிதான்வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந் திடம்பெறவிடக்கைசித்தே. ௩௰

நாடிபார்க்கும் மாதவகை.

சித்திரைவைகாசிக்குச் செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி யைப்பசிகார்த்திகைக்கு
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதையுமாசி
வித்தகன்கதிரோன்மேற்கில் விழுகின்றநேரந்தானே. ௩௧
தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்
மானமாம்பிரட்டாசிக்கு மற்றைராத்திரியிற்பார்க்கத்
தேனென்றுமூடிநாடித் தெளிவாகக்காணுமென்று
கானமாமுனிவர்சொன்ன கருத்தைநீகண்டுபாரே. ௩௨

நாடிநிதானம் முற்றிற்று.

சித்தாநந்தவைரவம்.

இக் தெண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பாரப்பாபுலத்தியனேசித்தானந்தம் பரிவானவைரவந்தான்
சொல்லக்கேளு, சேரப்பா திரிகடுகுசி *சிவப்பநாவ திறமான 0வெரிச்

* சிவப்பு-லிங்கம். 0 எரிச்சல்-பெருங்காயம்.

சலொடு *பொரிச்சலேழும், நீரப்பாசமன்கூட்டிப்பழத்தின்சாற்று ல் நிசமாகநாற்சாமமரைத்துக்கொண்டு,தாரப்பாகுன்றிபோனிழலு லர்த்தத் தப்பாமற்செப்பில்வைத்துச்சொல்லக்கேளே. ௩௩

கேளப்பாவிஞ்சிநீருள்ளித்தயிலங் கெடியானமுலைப்பாலிற் கொடுத்தாயானால்,நாளப்பாசனனிவகையெல்லாம்போகும் நலமா கதேன்கூட்டிக் கொடுத்தாயானால், தாளப்பாதோஷமென்ற தெல் லாம்போகுந் தப்பாதுகண்ணிலிட தீருந்தீரும்,கேளப்பாரசானந்த வைரவந்தான் செப்புகிறேன் சிவப்புநாற் ௦ பொரிதானெட்டே. ()

இராசானந்தவைரவம்.

எட்டப்பாநாவியீராறுமாகு மிதமானதிப்பிலியும் பன்னிரண் டு, தட்டப்பாவிஞ்சிரசந் தன்னுலாட்டித் தளமாகநாற்சாம மரைத் துக்கொண்டு, விட்டப்பா மிளகுபோனிழலுலர்த்தி விருதானசெப் பில்வைத்துச் சொல்லக்கேளு, அட்டப்பா வநுபானமறிந்துபோடு அப்பனேசன்னியென்ற மூலம்போமே. ௩௫

வாதருக்ஷசன்.

போமப்பாவாதராக்ஷசனேக்கேளும் புதுமையாய் ! வேந்தனே டு ? நாற்றங்காந்தஞ், சேமப்பாவப்பிரகதாம்பிரபற்பம் திறமாகவ ஞ்சுவிதம்சமனுய்க்கூட்டிச், சாமப்பாவெள்ளைச்சாரணை மன்சாற்று ல் தளமாகநாற்சாமமரைத்தபின்பு, வேமப்பாசிந்திவிட கியாழந்த ன்னில் வெகுசுறுக்காய்நாற்சாமமறைத்திடாயே. ௩௬

அரைத்திடுவாய்கொடிவேலிக்கியாழந்தன்னில் அருந்துளசி ச்சாறு திரிபலைக்கியாழம், அரைத்திடுவாய்வெவ்வேறேசாமம்ரண் டு அழகாகமொத்தையா யுருட்டிக்கொண்டு, அரைத்திடுவாய்சா ணையினிலையரைத்து அன்பாகமருந்தையுளே வைத்துமூடி, அரை ததிட்டவிலைகருப்புடைத்துப்போட்டு ஆரினபின்னெடுத்ததனு ல ரைக்கக்கேளே. ௩௭

கேளப்பாசித்திர மூலத்தின்கியாழம் கிருபையாய் நாற்சாமம ரைத்துக்கொண்டு, நாளப்பாமும்மூன்று விராகன்வீதம், நலமாக வேயுருட்டிக்கட்டிக்கொண்டு, தாளப்பாநிழலுலர்த்திவைத்துக்கொ

* பொரிச்சல்-வெண்காரம் ௦ பொரிவெண்காரம் ! வேந்தன்-ர சம். ? நாற்றம்-கந்தம் : திரிபலை-கடுக்காய். தான்றிக்காய்-நெல்லிக் காய். ௩௮

ண்டுதளமானசன்னிவகை தேஷமெல்லாம், வேளப்பா லனுபான மறிந்துபோடு வெகுசுறுக்காய்வாதமெல்லாம் விழலாய்ப்போமே.

சுயமக்கினி.

கேளப்பாசுயமக்கினிசொல்லக்கேளு புகழானரசமூன்று*நாற் றம்ரண்டு, காமப்பாகாந்தசெந்தூரம்நாலு கலங்காதே 0 சிலையிரண் டு ! சிவப்பிரண்டு, தாமப்பாவெழுகுபொடிதானென்று தவறாமல்? குமரிச்சாறரைப்புக்கேளு, ஆமப்பாபட்சமொன்று அரைத்துருட் டு அப்பனேயிஞ்சிரசந் திரிகடுகுதூளே. ௩௯

தூளிலேதேன்கூட்டிப் பணவிடைதான்போட்டுத் தொடர்ந் துவரைமண்டலந்தான்கொண்டாயானால், நாளிலேயக்கினியாமந்த தீரும் நாடாதுபீலிகையுங்குன்மவாயும், தேனிலேவாயுவென்றதெ ல்லாந்தீரு திரமானகவுசியொடுபாண்டுதீரும், சூலிலேசுரமெல்லாஞ் சுறுக்காய்தீரும் சுகமாகும்பத்தியந்தான்புளிகசப்புத்தள்ளே.

இதுவுமொருவகை.

தள்ளவேயின்னமொருசெய்திகேளு தயவானவேந்தனென்று நாற்றம்ரண்டு, விள்ளவேஅயப்பொடிதானுங்கூட்டி விருதானகு மரிச்சாறதனாலாட்டிப், பள்ளவேகற்சாமமரைத்துருட்டிப் பாங்கா னவெருக்கிலையாற்சுற்றிக்கட்டிக், கள்ளவேபாண்டத்தில்பட்சம்வை த்துக் கலங்காதேபொடிசெய்து திருகிக்கொள்ளே. சக

கொள்ளடாதேன்கூட்டிமண்டலந்தான் கொடியானகும்பமெ ட்டும்பீலிகையுந்தீரும், கள்ளடாபாண்டுவகை யெல்லாந்தீருந் தள மானமண்டலந்தான்கொண்டாயானால், விள்ளடாசுரமென்றததறுபா னுன்கும் விட்டுவிட்டுக்கடபுக்கும் விருதுபோடே. சஉ

கபாடமாத்திரை.

போடவேகபாடமாத்திரைதான்கேளு புகழானசாதிக்காய்ப் பத்திரிக்காயம், நாடவேசிரகமும் விடையங்கிராம்பு நலமான்வபினி

---

* நாற்றம்-கந்தகம் 0 சிலை-மனேசிலை ! சிவப்பு-லிங்கம். ? குமரி சோற்றுக்கற்றாழை.

* சடைவன்னிக்கற்பங், தேடவேவெந்தயமுங் கழற்சிவித்துத் திற மானகுரோசாணி பதினென்றுந்தான், ஆடவேசமந்தூக்கிக் கல்வத் திட்டுஅப்பனே ० யானந்தமூலிசாறே. சரு

சாற்றாலே நாற்சாமமரைத்துக்கொண்டு சாதகமாயிலந்தைவி தைப்பிரமாணந்தான், சாத்தாலேமேதினியென்றதயிர்நான் மூன்று கசக்காதே * மதுவிலிடுமூன்றுநாள்தான், வார்த்தாலேவாழையிட பூவின்சாற்றால்வகையானதனிச்சாற்றிலிட்டாயானால், வேர்த்தாலே யிரத்தமுஞ்சீழ்கிராணி விதமானசலக்கிராணிதானுமாமே. சசு

ஆமப்பாசதக்கிராணிவாய்வுக்கிராணி அப்பனேசூரிகாகிராணி தீரும், போமப்பாசோறுசேருய்க்கழிகிராணி பொலிவான நீர்தாய் க்கிராணிதீரும், நாமப்பாவயிற்றிலுள்ள கடுப்புத்தீரும் நலமானபா ண்டுநோய்க்கிராணிதீரும், தாமப்பாவதிகாரக்கடுப்புத்தீருந் தப்பா துபுளிக்கூட்டிப் பத்தியம்போடே. சஎ

பூபதிக்குளிகை.

போடப்பாசடலத்துண்ணேய்கள்போகப் பூபதிதன்மருந் தொன்றுசொல்லக்கேளு, சாடப்பாதங்கமொடுவெள்ளுநாகந் தள மானலோகமொடுமுத்துரத்தினம், நாடப்பாசூதமொடுகெந்திலிங்க ம் நலமானசிலையொடு தார்சுங்கிநாலி, ஆடப்பாவிவையெல்லாம்பழ ச்சாற்றாலே ஆட்டியேநாணுசாம் வில்லைசெய்யே. சஅ

செய்யப்பாரவியுலர்த்திய கலில்வைத்துத் திறமானமேல்மூடிச் சீலைசெய்து, வையப்பாமுப்புடத்தில் சிவந்துபோகும் வளமாகயெ டைக்கெடைதான்லிங்கங்கூட்டி, மெய்யப்பாமுலைப்பாலினுன்கே சாமம் விடாமலரைவிரனீள முண்டைசெய்து, கையப்பாநிழலுலர் த்திச்செம்பில்வைத்துக் கலங்காதேவைரவற்குப்பூசைபண்ணே.

பண்ணியேபூபதியை மூலைப்பாலுக்கும் பரிவாக வரிசியெடை கொடுத்தாற்கேளு, சண்ணியேசந்நிதிபன் மூன்றுந்தீரும் தப்பாது தோஷமென்ற ரேமூந்தீரும், கண்ணித்திரிதோஷமுசிங் கிலிதமெல் லாங்காணுது கடல்புக்குங்கருதிப்பாரு, விண்ணியேசிரசி நின்ற தோஷமெல்லாம் வெகுசுறுக்காய்தீருமடா விரைந்துப்பாரே.

---

* சடைவன்னிக்கற்பம் - சடைக்குஞ்சர, ० ஆனந்தமூலி-கஞ் சா * மது-தேன்.

பாரப்பாபூபதியையிஞ்சிச்சாற்ருற்பரிவானதேன்கூட்டிக்கொடுத்தாற்கேளு, சாரப்பாசமமாகபோனுலுந்தான் சாதுரியப்பிராணன்வந்துசற்றேபேசும், ஆரப்பாபிரமலயவ்வளவேயாயின் ஆசித்துப்பேசினடுமரணமாவான், தாரப்பாபூபதியைச்சொன்னேன்சொன்னேன் சாதித்துவைத்தியஞ்செய்தருமமாமே. சக

இரசசிந்தாமணி.

ஆமப்பாரசசிந்தாமணியைக்கேளு அப்பனேசூதமொடுசிவந்தரத்தம், தாமப்பாதங்கமொடுவெள்ளிமுத்து தயவானபவழமொடு தீட்சணந்தான், நாமப்பாசிலைகெந்தியப்பிரேகம் நலமாகவகைக்குமிருகழஞ்சுகூட்டி, ※ காமப்பால்விட்டரைப்பாய்சாமம்நாலு கருவானசித்திரமூலக்கியாழந்தானே. ருய

கியாழத்தாலரைத்திடுவாய்சாமம்நாலு கெடிதானவெருக்கம்பாற்சாமம்ரண்டு, நியாயமாஞ் () சோகிதனிலடைத்துக்கொண்டுநிலவரமாய்மூலமென்றசாம்பலுக்குள், விபரமாயறையறையாய்வைத்துமூடி விதமாகவெழுசீலைமண்ணுசெய்து,.கியாழமாயிரவிதனிலுலரப்போட்டுத் திறமாகக்கசப்புடத்திற்சென்றுவாங்கே. ருக

வாங்கியேஎடைக்கெடைதான்சூதங்கூட்டி மைந்தனேநாபிமுக்காற்கழஞ்சிகூட்டி, ஓங்கியேநாற்சாமந்திரிகடுகுகியாழ முத்தமனேதிரிபலையின்கியாழந்தன்னுற், றேங்கியேயிருசாமமறைத்தபின்பு திறமாகவெருக்கினிடப்பட்டைசாற்ருல், தாங்கியேயிருசாமமரைத்துருட்டி தப்பாமனிழலதனிலுலர்த்திவையே. ருஉ

வைத்திதனைவைரவர்க்குப்பூசைபண்ணு வாகாகக்கணபதியைபூசைபண்ணு, வைத்தொருமாத்திரைக்குச்செபந்தான்பண்ணு தப்பாமற்றேவியைத்தான்பூசைபண்ணு, சித்திதருமாத்திரையையனுபானத்தில் திறமாகக்குன்றியெடைகொடுத்தாற்கேளு, பற்றிநின்றசன்னிமுதற்றோஷமெல்லாம் பறக்குமடாசுரமென்றதெல்லாந்தானே.

தானென்றரசசிந்தாமணியின்பேரைச் சாற்றினுல்யமதூதர்ஒடுங்குவார்பார், ஏனென்றேநாளிருந்தால்வைத்தியோரே எய்துமோமாத்திரைநானியம்பக்கேளு, பானென்றமாத்திரைகள்பணமாய்ச்செய்து பரிவானவுலகத்தில்வைத்தியஞ்செய்ய, தேனென்றவைத்தியர்க்குச்சொன்னேனிந்நூல் திறமானவாதியென்ருற் செய்வேன்பாரே. ருச

※ காமப்பால்-முலைப்பால். () சாகி-பலகரை.

கோரோசனைக் குளிகை.

பாரப்பா கோரோசனைக்குளிகைகேளும் பாங்காகக்கோரோசனைகுங்குமப்பூ, சாரப்பூகர்ப்பூரம்ரசசெந்தூரஞ் சார்பானபச்சைக் கர்ப்பூரமேலம், சேரப்பாவப்பிரேகங்கிராம்புகோஷ்டம் திறமானசாதிக்காயக்கிராகாரம், ஆரப்பாவகையொன்றுகழஞ்சுமூன்று அப்பனேகல்வத்திற்பொடித்துக்கொள்ளே. ருரு

பொடித்திதனையரைப்பதற்குக்கியாழங்கேளு பேரரசைசந்தனத்தூள்கியாழஞ்செய்து, துடித்திதனைச்சாமநா லரைத்துக்கொண்டு துலங்கவேசண்பகப்பூகியாழஞ்செய்து, கடித்திட்டுவிருசாமமரைத்துக்கொண்டு கருவானகுங்குமப்பூகியாழஞ்செய்து, துடித்திட்டுவிருசாமமரைத்துக்கொண்டு துலங்கவேகுன்றிபோலுருண்டைசெய்யே. ருகூ

உருண்டைசெய்துநிழலுலர்த்திசெப்பில்வைத்து உத்தமனேமுலைப்பாலில்கொடுத்தாயானால், தொண்டையுறுசேத்துமங்கடோண்ணூற்றுறுந் தொலைந்துவிடுஞ்சன்னிஎல்லாஞ்சொல்லாதோடும், மண்டைகட்டுச்சூலைமுதநீர்த்தோஷங்கள் மயக்கமொடுசேத்துமமுமாண்டுபோகும், சண்டையிட்டுவந்தவொருவலிப்புமிகவுஞ் சண்ணுண்டுபோகுமடாசொல்லக்கேளே. ருச

பூமணிக்குளிகை.

கேளடாபூமணிதான்சொல்லக்கேளு கிருபையாம்ரோகணியுமிலுப்பைப்பூவும், நானடாவாளமதுரொட்டிசேர்த்து நலமானகுமரிச்சாறதனுலாட்டி, வேளடாநாற்சாமமரைத்துக்கொண்டு விதமானதூதுளங்காய்ப்போலுருட்டித், தாளடாநீயுலர்த்திசெப்பில்வைத்துத் தளமானவிஞ்சிரசந்தேனுங்கூட்டே. ருஅ

கூட்டியமாத்திரைதானொன்றுதேய்த்துக் குழப்பியேகாலமேகொடுத்தாற்கேளு, நாட்டியதோர்சன்னிசுரமெல்லாந்தீரும் நலமானவிடாசுரமும்நாடாதோடும், தீட்டியதோருள்ளியென்றதைலத்தூட்டத் திறமானதோஷமெல்லாந்தீரும்தீரும், வாட்டியேயெண்ணையிலேகொடுத்தாயானால் வாங்கிவிடும் வாயுவெல்லாம் மாண்டுபோமே. ருகூ

அர்த்தனாரீஸ்வரம்.

போமப்பாஅர்த்தனாரிசூரணந்தான்கேளு புகழானசூதமொடுநாவிகேந்தி, நாமப்பாவெண்காரம்சமனுய்தூக்கி நலமானநொச்சியிலைச்சாற்றினாலே, வேமப்பாவிருசாமமரைத்துக்கொண்டு விதமானகுகையிலிட்டுசீலைசெய்து, தாமப்பாமண்செய்துசட்டிக்குள்ளே தயவாகவுப்பையிட்டுக்குகைவைவையே. கூ0

வைத்ததிலேமேலுமந்த வுப்பைக்கொட்டி வாகாகமேற்சட்டி கொண்டுமூடி, வைத்ததிலேசிலைசெய்தடுப்பிலேற்றித் தப்பாமற்சம லவன்னிநாலுசாமம், நைத்ததிலேயாறவிட்டெடுத்துக்கொண்டு ந லமானசெங்கழுநீர்சாற்றினாலே, பைத்ததிலேநாற்சாமமாட்டிக்கொ ண்டு பருவமுடனேச்சிரசம் விட்டேயாட்டே. சுக

ஆட்டப்பாநாற்சாமம்பாகற்சாற்றால் அப்பனேநாற்சாமமாட் டிக்கொண்டு, நாட்டப்பாரவிமுகத்தி லுலர்ந்தபின்பு நன்றாகக்குழ லடைத்து வைத்துக்கொண்டு, மூட்டப்பாபணவெடை தூள் சாற் றிலிட்டு முறையாகக்கொடுத்திடவே சுரங்கள்தீரும், காட்டப்பா விருபுரத்தோர் பறந்தானிறக்குங் கருவானமுன்சாற்றி வசியம்பண் ணே. சுஉ

பண்ணப்பாஒருபுரத்திற் சுரந்தானிற்கும் பக்குவமாய்மறுபுற த்தினசியம்பண்ண, கண்ணப்பா விருபுறமுந்தணிந்துபோகுந் தப பாது ஆட்டுப்பாற்கஞ்சிகொள்ள,நண்ணப்பாபுலத்தியற்காய்ச்சொ ன்னேன்கேளு நாட்டிலுள்ளோரிதையறிந்துயார்தான்செய்வார், க ண்ணப்பாவெளிப்பில்லைசொல்லிவிட்டேன் கருவானவைத்தியர்க் குக் கருகைக்காணே. சுங

சிலோதாரிமணி.

காணப்பாசிலோதாரிமணியைக்கேளு கனத்த *பொரிதிரிகடுகு படியொவ்வொன்று, காணப்பாகடனுரையுஞ்சூரைவிந்து நலமாக விந்துப்புகாயமொன்று, மாணப்பாநேர்வாளம்ரெண்டுங்கூட்டிவகை பத்துமிளநீரிற்சாமமாட்டி. பேணப்பாவிலைந்தைவிதைப் பிரமாணந் தான் பிசகாமணிழலுலர்த்திச் செப்பில்வையே. சுச

வைத்தப்பாவிஞ்சிநீர் தேனுங்கூட்டி வளமான மாத்திரையை க்கொடுத்தாயானால், சத்தப்பாவாயுவொடுவாதமெல்லாஞ் சாந்தமா ம்பித்தமெல்லாங்கீழேசாடும், வைத்தப்பாமதுவிலே யிட்டயானால் மாந்தமொடு உப்பிசமும்வாங்கிப்போகும், எய்த்தப்பாநீரடைப்புச தைபடைப்புதிரு மிதமானசிலோதாரி யென்றுகாணே. சுரு

கரிசாலைலேகியம்.

காணப்பாயாண்டு வகையாவும்போகக் கரிசாலைலேகியந்தான் சொல்லக்கேளு, நாணப்பாபொற்கையான் சாறுபடியிரண்டுநலமா னநெருஞ்சிரசபலமிரண்டு, வணப்பாசிறுகீரைச்சாறுபடிஒன்னுவள

* பொரி-வெண்காரம்.

மானகொடுதனுநீர் படிதானென்று, தாணப்பாகிழ்க்காயிசெல்லிச் சாறு தருவாறுசெருப்படிநீர் படிதானென்றே. ௬௬

ஓரப்பாகியாழுவகை சொல்லக்கேளு உரமானநாவல் கருங்கா லியத்தி, ஒன்றப்பா தென்னம்பூவதை யொன்றுக்கு ஓர்பலந்தான் மஞ்சணன்று யிடித்துப்போட்டுக், கண்டப்பாதூணிநீ ரெட்டொ ன்றுச்கிக் கருவானசாற்றினுள்ளே கருத்தாய்வைத்துக், கிண்டப் பாசமமாக்கியிறக்கிக்கொண்டு கெணிதமுடன்கருவானசாற்றிற்றே ரே. ௬௭

சேர்க்கவின்னங் கியாழமொன்று சொல்லக்கேளு செப்புறே ன்மினகொடுமிளகரணைமூலம், மார்க்கமாம் அவுரியொடுசிற்றுமுட் டி வளமானபேராமுட்டிவிலாமிச்சோடு, தீர்க்கமாய்படிமூன்றுகிறு த்துக்கொண்டு, திறமாகவிடித்ததனை தூணிநீரில், சேர்க்கவேசோட ர்த்தோடேடென்றுய்க் காச்சிசிதருதேமுன்கியாழந்தன்னிற்கூட் டே. ௬௮

கூட்டுவாய்பனைவெல்லம் பலந்தானெட்டு கூறுணகன்னல்வெ ல்லம்பலந்தானெட்டு, மாட்டுவாயாவின்பாற்படிதானுறு வளமாகக் கரைத்துவிட்டுச் சொல்லக்கேளு, காட்டுவாயடுப்பேற்றிப் பாகு செய்து தருவானசீரகமு மேலங்கிறும்பு, நீட்டுவாய்சாதிக்காய் சா திப்பத்திரிகிணைவாகவே மங்குரோசானியாமே. ௬௯

ஆமப்பா நாகப்பூகற்கடகச்சிங்கிஅப்பனேகோஷ்டமோ டக் கிருகாரம், தாமப்பாமதுரமொடு தாளிசபத்திரி தப்பாமற்றிரிகடுகு திரிபலாதி, நாமப்பாவகையொன்றிற்பலந்தானென்று நலமாகச்சூர ணித்துமுன்பாகில்தூவி, வேமப்பா கிண்டையிலேயாவினெய்தான் விரைவிலரைப்படிவீதம்விட்டுக்கிண்டே. ௭௰

கிண்டப்பாதேனதிலே படிதான்விட்டுக் கிருபையொடு திரி லோகச்செந்தூரந்தான், தாண்டப்பாபலமொன்று கூடப்போட்டு த்தப்பாமன் * மண்டூரம்பலமொன்றப்பா, மண்டப்பாகிண்டியதமெ ழுகாய்வாங்கி ககத்தானபுன்னைக்காயளவேவீதம், கொண்டப்பா மண்டலந்தான்சென்றதானற், கூறுகெட்டவெண்பாண்டஞ்சிவக்க லாச்சே. ௭௧

ஆச்சப்பாபாண்டுவகையாவும்போகும் யப்பனேபித்தவெட் டைக்கைகாலோச்சல், காச்சப்பாகாந்தலுடனெறிவுபோகுங்கணமா

* மண்டூரம்-பழஞ்செங்கற்சிட்டம்.

ன்வாந்தியொடு மயக்கந்தூக்கம், ஓச்சப்பாவீக்கமொடு நீர்ச்சுரப்பு மூத்தமனேகிராணியெல்லா மொழிந்துபோகும், நீச்சப்பா வரோசி யங்களெல்லாம்போகும் நிசமான * அசுவகெந்தித் தைலமூழ்கே.()

கண்டாத்திரிலேகியம்.

மூழ்கவேகண்டாத்திரி லேகியஞ்சொல்வேன் மூக்கியமாயிஞ் சிரசம் படிதானொன்று, நீழ்கவே கண்டங்கத்திரியின்சாறு நிணைவா கிப்படியொன்று கூடவிட்டுத், தாழ்கவேநெருஞ்சி நீர்ப்படிதானொ ன்று தப்பாமல்முள்ளங்கிப்படிநீர்விட்டு, வீழ்கவேபழச்சாறு படி தான்விட்டு வியனனவாவின்பாற் படியிரண்டே. எஙு

ரண்டான பனைவெல்லம்பலந்தானெட்டு நணுகியகையடுப்பே ற்றிபாகுதேரிற், குன்றனதிரிகடுகு சீரகமுமேலங் குலவம் வாய்வி ளங்கங் கிராம்புகாளிசம், நன்றாகபலமொன்று சூரணித்து நலமுட னே காற்படிதான் வறனும்வாரே. எச

வாத்தப்பா கிண்டியதை மெழுகுபோல வளமனே லேகியத் தைப் பதனம்பண்ணு, பார்த்தப்பாபாக்களவு வீதமாகப் பதருமவி ருநேரங் கொள்ளுங்காலம், காத்தப்பாமண்டலத்தான் கொண்டயா னற் கலங்காதே வாதமொடு வாயுவெல்லாம், போத்துறுநற் பித்த மொடு வாந்திசூலைப் புகழுநல்வழிமிகவும் பறந்துபோமே.

போய்ப்பாரே சிங்கங்க ளன்னதோஷம் பொறுக்காத குன்ம மெட்டும் பொருமல்வீக்கம், சாமப்பாபித்தத்தி னெரிவிதெல்லாம் சாடிவிடுங்கப்புவலி சாந்தமாகும், நாமப்பா பித்தத்தின் கபாலகுத் தல் நாடாது மயக்கமெல்லா நடுங்கியோடும், தேமப்பாகுமரியிட தைலமூழ்கில் திறமான தத்தநோய்த் தீரும்பாரே. எசு

பஞ்சதீபாக்கினிலேகியம்.

பாரப்பாபஞ்சதீபாக்கினியென்னப் பகருகின்ற லேகியந்தான் சொல்லக்கேளு, ஆரப்பா திரிகடுகுயேலஞ்சீரம் அப்பனேவகையொ ன்று பலந்தானென்றும், பேசப்பாவிளவறுப்பாய்ச் சூரணித்துப் பெரிதானவாவின்பாற் படியிரண்டு, சேரப்பா பனைவெல்லம் பலந் தானெட்டுச் சிறப்பாகக்கறைத்ததிலே பாகுசெய்யே. எஎ

செய்யப்பா சூரணத்தை தூவிக்கிண்டு திரமாணதே னெய்தா னுரியுழக்கு, கையப்பாவிட்டதிலே கிண்டிக்கிண்டிக் கருவாகமெழு குபதமாகவாக்கி, மைய்ப்பாபாக்களவுமிருநேரந்தான் மைந்தனே

* அசுவகெந்தி-அமுக்கரு.

மண்டலந்தான்கொண்டாயானல், தையப்பாதீருகின்றவியாதிகே ளு தருவானவாய்வோடுவாதமாமே. எஅ

ஆமப்பாவுஷ்ணங்கள்பித்தவாயு அப்பனேசரீரத்திலுளேவுரு த்து, போமப்பாவலிகடுப்புமெரிச்சல்பேதி பொருமலுடன்வாயுவெ ன்றகிராணிதீரும், வேமப்பாவலிகடுப்பாமஸ்திவெட்டை விருந்தா னவாந்தியெல்லாம்விழலாய்ப்போகுஞ், சாமப்பாவாக்கினிடதைல மூழ்கு சகலசுரம்விட்டோடுஞ்சார்புபாரே. எகூ

கண்டங்கத்திரிலேகியம்.

சார்வானலேகியந்தானென்றுகேளு சாற்றுகிறேன்கண்டங்க த்திரிதூக்கம்பாரு, ஆர்வாகவிடித்ததனைத்தூணிநீரில் அப்பனேஎ ட்டொன்றாய்க்காய்ச்சிவிட்டுச், சேர்வாகப்பனைவெல்லம்பலந்தான் பத்துச் சேர்த்ததிலேபால்படிதான்பாகுசேரில், தார்வாகதிரிகடுகு திரிபலாதி தருவணவாய்விளங்கமோமமாமே. அய

ஓமமொடுகுரோசானிலவங்கப்பட்டை உத்தமனேசீரகமூநறு க்குமூலம், நாமமோடத்திப்பிலியுங்கோஷ்டம் நலமானதாளிருமு மக்கிராகாரம். வாமமொடுவகையொன்றுபலந்தானென்று வளமாக ச்சூரணித்துப்பாகிற்றாவி, சேமமோடாவினெய்படிகால்விட்டுத் தி ரமாணதேனதிலேபடிகால்வாரே. அக

வார்த்ததிலேகிண்டியதுமெழுகுபோலே வளமானலேகியம்பா க்களவுவீதம், பார்த்ததிலேயிருநேரங்கொண்டாயானற் பறக்கும டாகழவாகம்பாரிச்சூலை, தேற்றியேகிருமியொடுபுழுக்களெல்லாந் தேகத்தைவிட்டோடுங்கர்ப்பவாயு, சாற்றதிலேயுஷ்ணநோய்பித்த மெல்லாஞ் சாராதுசித்தாகிலேகியங்கேளே. அஉ

சித்தாதிலேகியம்.

கேளப்பாவாறுதிங்கள்சென்றகாடி கிருபையாய்படிபத்தும்பு ளித்தமோரும், நாளப்பாபடிபத்துக்கூடவிட்டு நலமானபுளியிலை தூக்கிடித்துப்போட்டுக், கேளப்பாதுருப்பிடித்தவிரும்பெடைதா ன்போட்டுக் கொதிக்கவைத்துஎட்டொன்று யிடித்துக்கொண்டு, வேளப்பாகையானீர்படிதானிரண்டு விருகானவிஞ்சிரசம்படிதான் ஒன்றே. அங

ஒன்றானபழச்சாறுபடிதானென்று உத்தமனேநெருஞ்சிரசம் படிதானென்று, சென்றானசிறுகீரைபடிதானென்று செருப்படை தானபடியொன்றுதென்னம்பூநீர், பண்டாடபடியொன்றுகீழாநெ

ல்லிபதறும்மற்படியொன்று கூடச்சேர்த்து, கண்டான வாவின்பால்
படிதானுலுகருவான பனைவெல்லம்பலந்தான்பத்தே. ௮௪

பத்தாகக் கரைத்துவிட்டுப்பாகுசேரில் பக்குவமாங் கடைச்
சாக்குதிரிகடுகுவோமம், நந்தானதிரிபலைகோஷ்டமாஞ்சில் சுலமா
னசீரகம்வால்மிளகுஏலம், கைத்தானகிராம்புதாளிசபத்திரிகரு
வான லவுங்கத்தோலானைத்திப்பிலி, ஓத்தானபலமொன்றுதூக்கிக்
கொண்டு உறுவாகயிளவறுப்பாய்ச்சூரணந்தான்செய்யே. ௮௫

செய்யப்பா முன்பாகிற்றூவிஙிண்டிச் செரியாகவாவினெய்ப்படி
தான்வாரு, கொய்யப்பாதேனதிலேபடிதான்வாரு குழம்பாகலேகி
யத்தைப் பதனம்பண்ணு, பையைப்பாவிருகல்லுஞ்சி யிருநேரங்
கொள்ளப்பறக்குமடா பாண்டுவகையெல்லாந்தீரும், மையப்பாபி
த்தவெட்டைபித்தவாய்வு மயக்கமோடக்கினியாமந்தந்தானே.

மந்தமொடுவெளுப்பான தேகமெல்லாம்வண்டுபோல் கறுக்கு
மடாமண்டலத்தில், அந்தமமகோதரம் பீலிகையால்வாயு அப்பனே
சோகையொடுகிராணிமூலம், பொந்தமாமுடம்பெரிப் பிளைப்போடீ
ளைபொருமலுடனுப்பிசங்க ளிரைச்சல்தீரும், பந்தமாம்பத்தியங்க
ள்நன்றாய்க்காத்துபக்குவமாமண்டலத்தில் சொல்லக்கேளே. ௮௭

மகாவில்வாதிலேகியம்.

சொல்லக்கேள்புலத்தியனேயின்னமொன்று சுறுக்காதநோய்
க்கெல்லாமகாவில்வாதி, வல்லக்கேள்வில்வத்தின்மூலமப்பா வள
மாகப்பலம்நூறுவெட்டிவந்து, நல்லக்கேள்விலாமிச்சைவகைபாதி
ரி நலமாகநன்னாரிபரிவிளாவும், அல்லகேள்சிற்றாமல்லிபேராமல்லி
அழகானசிறுவிளாவேறுமாமே. ௮௮

ஆமப்பாசிறுவகைமுன்னையோடு அப்பனேமுசுமுசுக்கைகொ
டுவேலிதேற்றான், நாமப்பாவகைமொன்றுபலமூன்றாகும் நலமாகவி
டித்தேயிருதூணிநீரில், வேமப்பாவெட்டொன்றாய்வடித்துக்கொ
ண்டு வெறுளாதேகொம்மட்டிப்பழச்சாறிஞ்சி, காமப்பாசாறுபடி
யொன்றுவிட்டுக் கலங்காதேசர்க்கரைசேர்நாலுமாமே. ௮௯

ஆமப்பாவாவின்பால்படிதான்ரெண்டு அப்பனேகரைத்தெல்
லாம்பாகுசேரில், போமப்பாதிரிகடுகுதிரிபலாதி புகழானலவுங்க
மோடேலங்கோஷ்டம், நாமப்பாமதுரகெந்தஞ்சீரம்ரண்டு நலமான
விளங்கமொடுசகஸ்திரபேதி, வாமப்பாதாளிசம்செண்பகப்பூஅக்கி
ரகாரம் வளமானமல்லிவிளாவரிசிதேக்கே. ௯௰

தேக்கானமுந்திரிகைபேரீச்சுவில்வந் திறமானவாலுளுவைமர
சில்சிறுநாகம், பாங்கானநாககணமும்பருத்திவித்தும் பதருவே * னி

* நிம்பவித்து-வேப்பம்வித்து.

ம்பவித்திலுப்பைப்பூவு, தூக்கானவகையொன்று பலமொன்றுகச் சூரணித்துப்பாகிலேதூவிக்கிண்டி, நீர்க்கானதேனதிலேபடியரை த்தான்விட்டு நினைவாகவாகினெய்ப்படியரைதான்வாரே. ௬௧

வார்த்தப்பாமெழுகுபோல்கிண்டிக்கிண்டி வளமானலேகியத் தைப்பதனம்பண்ணி, கோர்த்தப்பாலேகியத்தைப்புன்னைக்காயள வு கொண்டுவரவிருநோம்தீரும்நோய்கள், சாற்றப்பாசுவாசமுடன் ரோகங்கள்தான் தவாதேவீக்கமொடுசத்தியெரிப்பாண்டு, காத்த ப்பாவிஷபாண்டுவெயிறெரிச்ச கனமானவுப்பிசங்கள்கிராணிபோமே

போமப்பாகைகாலிலெரிவகாந்தல் புகலும்வெள்ளோக்காளம ன்னதோஷம், ஈமப்பாசூலையொடுசெயந்தானெட்டு நலமானசுரங்க ளறுபத்துநாலுந், தாமப்பாபித்தமென்றநாற்பதுந்தான் தளமான வஸ்திசுரமானதெல்லாம், ஆமப்பாவதிசாரமுள்ளில்ரோக அகுளா னலோகவைத்துக்கொள்ளுகொள்ளே. ௬௩

கூழ்ப்பாண்டலேகியம்.

கொள்ளவேகூழ்ப்பாண்டலேகியந்தான் குணமானகூழ்படிச் சாறுநாலு, விள்ளவேதாழைம்பிடவிழுதின்சாறு விருதானபடியொ ன்றுசென்னம்பூவொன்று, தள்ளவேபழச்சாறுப்படிதானொன்று தி ளமானவாவின்பால்படிதான்ரண்டு, பள்ளவேசர்க்கரைதான் பல மோபத்து பதறுமற்கரைத்திதனைப்பாகுசேரே. ௬௪

சேருமேசீரகமல்லிகோஷ்டம் திறமானமிளகுமரசிக்காயேலம், காருமேசாதிக்காய்சாதிபத்திரி கருவானமதுரமொடுதாளிசந்தான், வாருமேலருவகைக்குப்பலமொன்றுக வகையாகசூரணித்துப்பாகி ற்றூவி, சேருமேதேனின்படியறைதான்விட்டு நினைவாகக்கூழ்போ லேகிண்டிவாங்கே. ௬௫

வாங்கியேபுன்னைக்காயளவுவீதம் வளமானலேகியத்தைக்கொ ண்டாயானுல், நீங்குமேகாமாலைசோகையெல்லாம் நீங்காதவஸ்திசு ரமஸ்திவெட்டை, தாங்கியதோர்பிரமியங்கள்வெள்ளவீழ்தல் தள மாகும்தேகபுஷ்டிவிந்துவூறும், பாங்கியேயுஷ்ணநோய் நீர்சுறக்கும் பாக்கும்புளிபுகையிலைத்தள்ளிக்கொள்ளே. ௬௬

சரபங்கவில்வாதிலேகியம்.

கொள்ளவேயின்னமொன்றுசொல்லக்கேளு குணமானசரபங் கவில்வாதிலேகியம், விள்ளவேவில்வவேர்வமடகாவேர் விருதானச ங்கம்வேர்வகைக்குத்தூக்கு, கொள்ளவேகூறுகிறசிற்றுமல்லி திற

மாசுபேர்மல்லி ⁰ கூந்தல்முள்ளி, கள்ளவேசாரணைவேர்கண்டங்கா லி நலமானவிலாமிச்சைசிந்தில்தானே. கூள

தானென்றகொடிவேலிபொன்முசுட்டை தளமானநன்னாரிசி றுதேக்கப்பா, வானென்றமூலிவகைபதின்மூன்றுந்தான் வளமான பல்மஞ்சுபிடித்துநைய, வேனென்றவாற்றுநீர்தூணிவிட்டு விளங்க வேயெட்டொன்றாய்நிறுத்துக்கொண்டு, கானென்றகன்னல்வெல்ல ஞ்சேர்தானுலுங் கருவானவாவின்பால்படியிரண்டுசேரே. கூஅ

சேர்த்தப்பாகரைத்ததிலேபாகுசெய்து திறமானதிரிகடுகுதிரி பலாதி, வார்த்ததிலேகிராம்பேலமிருசீரகந்தான் வளமானகோஷ் டந்தாளிசப்பத்திரி, வார்த்ததிலேயோமம்ரண்டரத்தைகண்டு வள மானகொத்தமல்லிலவங்கப்பட்டை, ஆர்த்ததிலேயக்கிராகாரமரத் தைதிப்பிலி அப்பனேவால்மிளகுசாதிக்காயாமே. கூகூ

ஆமப்பாவகையொன்றுபலமொன்றாக அப்பனேபினவறுப்பா ய்சூரணித்துச், சேரப்பாபாகிலேதூவிக்கிண்டித் திறமானதேன்ப டிசெய்பரைதான்விட்டு, நாமப்பாகுழம்புபோல்வாங்கிவைத்து நல மாகக்கழஞ்சிநிறையிருநேரங்கொள்ள, காமப்பாபித்தவெட்டைபர ண்டுமீறுந் தவறுண்டுபோகுமடாசயமெட்டுந்தானே. ரா

தானென்றகுன்மமெட்டுங்கிராணியாறுந் தடமானவாய்கசப் புவெள்ளோக்காளங், தேனென்றவாயூரலக்கினிமந்தந் திறமான்சூ லையொடுகைகால்காந்தல், பானென்றபித்தமதுநாற்பதுந்தான் பற க்குமடாமண்டலத்தில்பரிந்துகொள்ளு, வேநென்றபத்தியந்தான்பு ளிகசப்பு விளங்கியதோர்புகையொடுபெண்ணுந்தள்ளே. ராக

தள்ளப்பாதிரிலோகம்வைத்துக்கொள்ளு தளமானவாலைரசச் செந்தூரந்தான், கொள்ளப்பாலோகசெந்தூரந்தானுங் குறையாம ற்பணவெடைதான்வைத்துக்கொள்ளு, தள்ளப்பாபித்தமென்றதெ ல்லாம்போகும் தருவானசேத்துமங்கள்தொண்ணூற்றாறும், விள் ளப்பாகடல்புக்குங் கண்டுகொள்ளு விருதாகவின்னமொரு சேதி கேளே. ராஉ

கண்டங்கத்திரிலேகியம்.

கேளப்பாகண்டங்கத்திரியதானகெடிதானலேகியந்தான்சொ ல்லக்கேளு, நாளப்பாவாற்றுமுள்ளிபலந்தானூறு நலமானகரிமுள் ளியதற்குப்பாதி, தாளப்பாசிற்றாமுட்டி தளமானமிளகரணைகொ

* கூந்தல்-முதியார்கூந்தல்.

டிவேலிகளாவும், ஆளப்பரவாதண்டச்சிறுகாஞ்சோரி அப்பனேவி லாமிச்சைமூட்காவேளையாமே. ௱௩

ஆமப்பாகோரையுடனுத்தாமணியும் அப்பனேகழற்கொடியு மாமாவிலிங்கம், தாமப்பாவகைபொன்றுபலமொன்றாகத் தவறாமலி டித்ததேயிருதூணிநீரில், வேமப்பாவெட்டொன்றாயிறுத்துவாங்கி விருதானகொம்மட்டிபழநற்சாறு, தாமப்பாபடியரையுங்கூடவிட் டுத் தளமானவாவின்பால்படிதான்ரண்டே. ௱௪

ரண்டானசர்க்கரைதான்பலமுமைந்து நினைவாகக்கரைத்ததி லேபாகுநேரில், கண்டானகடக்காக்குசொல்லக்கேளு கருவானதிரி கடுகுதிரிபலாதி, நன்றானசிங்கியிருவாதந்தானும் நலமானவரத்தை யக்கிராலவங்கப்பட்டை, பின்றானலவுங்கஞ்சாதிக்காய்பத்திரியுங் கூட்டே. ௱௫

கூட்டுவாய்வகையொன்றுபலமொன்றாகக் கூசாமலிளவறுப் பாய்ச்சூரணித்து, நாட்டுவாய்பாதியிலேதூவிக்கிண்டி நலமாகத்தே ன்படிநெய்யரைதான்விட்டு,காட்டுவாய்மெழுகுபோல்கிண்டிக்கிண் டி கசக்காமல்பீங்கானில்வழித்துவைத்து, தீட்டுவாய்லேகியந்தான் புன்னைக்காய்வீதம் திறமாகமண்டலத்தில்தீரும்நோய்கேள். ௱௬

கேளுதான்சயமெட்டும்குன்மமெட்டும் கெடியானவாதமென் றன்பதும்போம், நாளுதானிப்பிளைவிளுநீர்கோவை நாடாதுயிதுவு முதல்கழல்வாதங்கள், தாளுதான்கெர்ப்பவெட்டைகெர்ப்பச்சூலை தளறுண்டுபோகுமதுபுழுக்களெல்லாம், ஆளுதான்தாளகமும்லோ கங்கூட்டி அடைவாகக்கொண்டுவரத்திரும்பாரே. ௱௭

கபாடலேகியம்.

பாருமேகபாடலேகியத்தைச்சொல்வேன் பண்பானநாவலிலோ டுவாசிவத்தி, சேருமேகருங்காலியொதியம்பட்டை திறமாகப்பலம் பத்தரிறுத்துக்கொண்டு, சாருமேயிடித்துநையத்தூணிநீரில் தன மாகவடுப்பேற்றியெட்டொன்றாக்கி, வாருமேபனைவெல்லம்பலந்தா ன்பத்து வளமாகக்கரைத்ததனிற்பாகுசெய்யே. ௱௮

பாகிலேதூவுதற்குமருந்துகேளு பதறாமல்கஞ்சாவைச்சுத்தி செய்து, பாகிலேபலமொன்றுதூத்திக்கொண்டு பாங்கானமிளகுசு க்குசீரகமுங்கூட, பாகிலேயோமமொடுஞாசானிஓமம் பருவமாய்ச் சிங்கிகாட்டாத்திப்பூவும், பாதியிலேவால்மிளகுசிறுநாகப்பூ பக்கு வமாமல்லியோடேலமாகும். ௱௯

ஆகுமேகிராம்புடனேசாதிபத்திரி அடைவானசாதிக்காய்விட யத்திப்பிலி, நாகுமேவகையொன்றுபலமொன்றாக நலமாகவிளவறு

ய்பாய்ச்சூரணித்து, வேகுமேபாதியிலேதூளி...தான் வெகுசுறுக் காய்த்தேனெய்யும்விட்டுக்கிண்டி, தாகுமேபீங்கானில்பதனம்பண் ணித் தப்பாமல்மண்டலந்தான்பாக்களவுகொள்ளே. ௩௰

அளவாகக்கொண்டுவரத்தீரும்நோய்கள் அதிகமுள்ளசூசிகா கிறுணிவாயு, பளுவானகடுப்புமுதற்பாண்கிறுணி பாங்காகபேதி யோடுஷ்ணவாயு, களவாகமூலத்தின்கிராணிவாய்வு கனாகாணுதோ டுமெதுமற்றவாயு, வளமாகக்கிராணியெல்லாந்தீருந்தீரும் மார்க்கமு டனின்னமொருவரிசைபாரே. ௩௰க

திப்பிலிரசாயனம்.

பாருமேதிப்பிலிரசாயனஞ்சொல்வேன் பகருகின்றதிப்பிலியு ம்பலந்தான்பத்து, சேருமேமிளகுமஞ்சுசுக்குமஞ்சு திறமானவிருசீ ரமோமம்ரண்டு, ஆருமேயரத்தைரண்டுதாளிசபத்திரி அடவானல வங்கப்பத்திரியும்பட்டை, காருமேதிரிபலைலவங்கமேலம் கனமான கொடிவேலிபலமொன்றுதூக்கே. ௩௰௨

தூக்கியேயிளவறுப்பாய்சூரணித்துச் சுகமானசர்க்கரைதான் சமனுய்கூட்டி, தாக்கியேதேன்விட்டுப்பிசைந்துகொண்டு தப்பாம ல்வெருகடிதான்கொள்ளும்போது, தேக்கியேயிளப்போடேயீளை காசந் திறமானசேத்துமநோய்தொண்ணூற்றுறு, நீக்கியேயுத்தரத் தின்வாயுவெல்லாம் நீங்கிவிடுமண்டலத்தில்நினைவாய்ப்பாரே. ௩௰௩

மஸ்துமிரசாயனம்.

பார்த்திடுவாய்புலத்தியனேமேகவகைதீரப் பண்பானமஸ்துமி ரசாயனஞ்சொல்வேன், சேர்த்திடுவாய்சீனமுதலமுக்கறுவேர் திற மானவகையொன்றுபலம்பத்தாகும், சாற்றிடுவாய்நிலப்பனைவேர்ப லந்தானைந்து தளமானதண்ணிவிட்டான்பலந்தான்ரண்டு, ஆற்றிடு வாய்நன்னரிசங்குமூலம் அன்பானதிரிகடுகுதிரிபலையுமாமே. ௩௰௪

ஆமப்பாலவங்கத்தோலவங்கப்பத்திரி அப்பனேசிறுநாகம்வா ய்விளங்கம், போமப்பாமல்லியிருசீரமோமம் புகழானகுரோசாணி அரத்தைகெந்தம், காமப்பாசிறுதேக்குகண்டங்கா நலமானகொடி வேலிவிலாமிச்சைமூலம், தாமப்பாதக்கோலம்வால்மிளகிலோடு தள மானமுந்திரிகைபேரீச்சுக்கூட்டே. ௩௰௫

கூட்டப்பாவெட்பாலைதாமரைக்கிழங்கு குலமானசாதிக்காய் கிரம்புபத்திரி, நாட்டப்பாகருவேம்பிநிலைவகைக்கு நலமாகப்பல மொன்றுநிறுத்துக்கொண்டு, காட்டப்பாவிளவறுப்பாய்ச்சூரணித் துக் கருவானகுங்குமப்பூகோரோசனைகர்ப்பூரம், வாட்டப்பாகழஞ் சுநிறைகூடச்சேர்த்து வளமானசர்க்கரைசேர்நாலுவாங்கே. ௩௰௬

வாங்கியேவாவின்பால்படிதானுஉ வளமானசர்க்கரையைக்க ரைத்துக்கொண்டு, பாங்கியேபாகுபதமாகும்போது பதருதேசூர ணத்தைக்காய்ச்சிக்கொண்டு, தேங்கியேதேன்படிதானென்றுவாரு திரமானவாவினெய்வரைதானப்பா, வாங்கியேமெழுகுபோல்கிண் டிக்கிண்டி வளமானபீங்கானில்பதனம்பண்ணே. ௱ய௭

பண்ணப்பாவிருநேரம்பாக்களவுகொள்ளப் பரிவுடனேதீருகி ன்றவியாதிகேளு, புண்ணப்பாகிரந்தியொடுசூலைதீரும் புதுமையாங் கண்டத்தில்மாலைதீரும், கண்ணப்பாவாய்வோடுவாதமெல்லாம் நா டாதுபிரமியங்கள்இலிங்கப்புற்று, தண்ணப்பாசேத்துமநோய்தொ ண்ணூற்றுறுந் தவறுண்டுபோகுமடாபத்தியங்காரே. ௱ய௮

சவுபாக்கியசுண்டு.

காரப்பாவுலகத்தோர்நோய்களெல்லாங் கலங்குமடாசவுபாக் கியசுண்டியென்றால், நேரப்பாசுக்கதுதான்பலந்தானெட்டு நினைவா கமேற்றோலைச்சீவிப்போட்டு, சாரப்பாமொச்சைவிதப்பிரமாணந்தா ன் தளமாகவேநறுக்கிப்புதுசட்டிக்குட், சேரப்பாசெம்முள்ளிச்செ ந்திராயும் திறமானமுறுக்கிலையுங்கரிசாலையாமே. ௱ய௯

ஆமப்பாசிறுசெருப்புசாற்றிலாட்டி அப்பனேசாறுவகைபடி கால்வீதம், நாமப்பாபுதுசட்டிச்சுக்கில்விட்டு நலமாகவெவ்வேறே பரவியுலர்த்தித், தாமபபாவடித்துநன்றாய்ச்சூரணித்து தனமாகவ டிகொண்டேயப்பால்வைத்து, போமப்பாதக்கோலம்வாலுளுவை வித்து புகழானகூகைநீர் * கரியபோளங்கூட்டே. ௱உய

கூட்டப்பாவாய்விளங்கந்தான்றிக்காய்நெல்லி கூறுனதிப்பிலி யுந்திப்பிலிமூலம், நாட்டப்பாவகையொன்றுபலந்தான்வாங்கி நல மாகவிளவறுப்பாய்ச்சூரணித்து, கூட்டப்பாவமுக்கறுபொன்முசு க்கை குருவானகண்டங்கத்திரிநன்னாடு, நீட்டப்பாநிலப்பனையும்வ கையொன்றுக்கு நினைவாகப்பலமிரண்டுநிறுத்துக்கொள்ளே. ௱உக

கொள்ளப்பாசுத்திசெய் திடித்துத்தூளாய்க் குணமாகவடி கொண்டுவைத்துக்கொண்டு, விள்ளப்பாமூலவரைத்தூளொன்றாய் க்கூட்டி விளங்கவேசர்க்கரையைச்சமனாய்வாங்கி, நள்ளப்பாவாவி ன்பால்படியிரண்டில்நலமாகசக்கரையைகரைத்துகொண்டு, அள்ள ப்பாவடுப்பேற்றிபாகமான லப்பனேமுன்தூளைகொட்டிக்கிண்டே.

* கரியபோளம்-கறுப்புக்குங்கிலியம்.

கிண்டப்பா தூளாகநன்றாய்க்கிண்டிக் கிருபையாய்ப்புதுக்கலசந்தனிலடைத்து, நண்டப்பா வெருகடி தானிருநேரங்கொள்ள நலமாகத்திருநோய்நவிலக்கேளு, கண்டப்பாகிராணிவகையெல்லாந்தீரும் கருவானபிரமியங்கள்சூசிகாவாயு, கண்டப்பாவாதமொடுபித்தமெல்லாங் காணுமலோடுமடாகண்டுகொள்ளே. ௱௨௩

கொள்ளவேயந்திரமாம்வாயுதீரும் கூறுனமேகவகைவாதசூலை, கொள்ளவேயந்திரமாம்மந்தந்தீரும் கூர்ப்பானவாயூரல்வாய்கசப்பு, கொள்ளவேவயிற்றிலுள்ளவியாதியெல்லாம் குடிபோகுஞ்சவுபாக்கியசுண்டிகண்டால், கொள்ளவேபுளிகசப்புப்பத்தியந்தான் கூறுனபுகையொடுபெண்ணுந்தள்ளே. ௱௨௪

தள்ளப்பாவக்கினியாஞ்சூரணத்தைச்சொல்வேன் தளமானகொடிவேலிதிரிகடுகுஓமம், விள்ளப்பாசிறுதேக்குயானைதிப்பிலியுங்கோஷ்டம் விளங்கியதோரிரண்டுப்புவகையொன்றுபலந்தான், நள்ளப்பாகாயங்கால்வசம்புகல்தான் நலமானகடுகுபொடிபறைப்பலந்தான்கூட்டித், தெள்ளப்பாவிளவறுப்பாய்ச்சூரணித்துத் திறமானசீனிசமங்கூட்டிக்கொள்ளே. ௱௨௫

திரிதராட்சதசூரணம்.

கொள்ளவேவெருகடி தூள்வெந்நீரிற்கொள்ளக் கூறுனகிராணிவகையுதிரவாயு, பள்ளவேமுகவாயுவாகமெல்லாம் பறக்குமதுதிரிதராட்சதசூரணங்கேள், தள்ளவேமுந்திரிகைப்பேரீச்சம்பழந்தான் தளமானவதிமதுரம்முக்காவேலை, நள்ளவேநெற்பொரியு * முத்தக்காசு நலமானவேலமொடுகிராம்புகூட்டே. ௱௨௬

கூட்டுவாய்கொத்தமல்லிமிளகுவேலி கூறுனதிப்பிலியுங்கூகைலவங்கப்பத்திரி, ஆட்டுவாய்வகையொன்றுபலமொன்றாக அப்பநேசூரணித்துச்சர்க்கரையைக்கூட்டி, வேட்டுவாய்வெருகடிதான்தேனிற்கொள்ள வெகுசுறுக்காய்சொல்லுகிறேன்விளம்பக்கேளே.

கேளப்பாயந்திரவாய்வுபாண்டுரோகம் கெடிதானசாபசுரமயக்கம்தூக்கம், வாளப்பாபித்தவகைநாற்பதுந்தான் வணமானவரோசிதங்களன்னத்தோஷம், நாளப்பாவுஷ்ணநோய்சேத்துமங்கள் நலமானவக்கினியாமந்தவாய்வு, தாளப்பாகையெரிவுகாந்தலெல்லாம் தலறாண்டுபோகுமடாநெய்யிற்கொள்ளே. ௱௨௮

---

* முத்தக்காசு-கோரைக்கிழங்கு.

அசுவகெந்திசூரணம்.

கொள்ளவேயசுவகெந்திசூரணங்கேள் குலமானலவங்கமொன்றுநாரப்பூண்டு, தள்ளவேயேலம்வால்மிளகோரெட்டு தளமானதிப்பிலியீரெட்டுசுக்கு, விள்ளவேமுப்பத்திரண்டுங்கூட்டி விசையானவசுவகெந்தியறுபத்துநாலு, நள்ளவேசுத்திசெய்துலர்த்திக்கொண்டு நலமாகவிளவறுப்பாய்ச்சூரணந்தான்செய்யே. ௱௨௬

செய்யப்பாசமனாகச்சர்க்கரையைக்கூட்டித் திறமானவாவின்பால்நெய்யிற்கொள்ள, கையப்பாவெருகடிதான்கோள்ளும்போது கனமானமேகவகைஎல்லாந்தீரும், மெய்யப்பாவஸ்திசுரம்வெட்டைபோகும் மேலானசுவாசமோடீளைபோகும், தையப்பாமேகத்தின்பாண்டுபோகுந் தளமானவூறலெல்லாஞ்சாராதென்றே. ௱௩௰

கண்டாத்திரி சூரணம்.

சாரவேகண்டாத்திரிசூரணஞ்சொல்வேன் கருவானவிஞ்சியதுபலந்தான்பத்து, சேரவேமேற்றோலைப்போக்கிப்போட்டுச் சிறுகவேநறுக்கியதைப்பழச்சாறாட்டித், தாரவேநாமென்றுஊறப்போட்டுத்தவறாமல்மறுநாள்தான்ரவியுலர்த்தி, ஆரவேசீரகமும்பலந்தானென்று அப்பனேமுன்போலேபழச்சாறாட்டே. ௱௩௧

ஊட்டியேமறுநாள்தான்காயப்போட்டு உத்தமனேமிளகொடுதாளிசப்பத்திரி, நாட்டியேதிப்பிலியின்மூலங்கிராம்பு நலமாககோஷ்டமொடுவாய்விளங்கம், வாட்டியேயிளவறுப்பாய்ச்சூரணித்துவளமானசர்க்கரைதான்சமனாய்க்கூட்டி; நீட்டியேவெருகடிதான்கொண்டாயானால் நீங்கிவிடும்பித்தமுதல்வாய்வுபோமே. ௱௩௨

போமப்பாவரோசிகங்களனனத்தோஷம் புகழானபித்தவெட்டைபொருமல்விம்மல், நாமப்பாவாயுவொடுவாதமெல்லாம் நாடாடசூலைஎல்லாநளினமாகும், சேமப்பாவயிற்றிலுள்ளவியாதியெல்லாந் திறமாகத்தீருமடாபத்யங்கூர்வேன், நாமப்பாவுலகோர்க்காபிரவகிச்சொன்னோம் நலமானசூரணத்தைநாட்டிப்பாரே. ௱௩௩

தாளிசப்பத்திரிச்சூரணம்.

நாட்டியேசொல்லுகிறேன்புலத்தியனேயையா நலமானதாளிசப்பத்திரிச்சூரணந்தான், காட்டியேதாளிசப்பத்திரிபலந்தான்பத்து கருவானதிரிகடுகுதிரிபலாதி, நீட்டியேகோஷ்டமோடக்கிராகாரம் நினைவாகவத்திதிப்பிலிசீரகம், கூட்டியேகொத்தமல்லிவாய்விளங்கங் கூறுணகிராம்பேலஞ்சாதிக்காயே. ௧௩௪

காயோடுபத்திரியுமானுசில்சோம்பு கருவானவால்மிளகுலவங்கப்பட்டை, காயோடுவிளைவயெல்லாம்பலமொன்றாகத் தவறாமல்சூரணித்துவடியேகொண்டு, சேயோடுசர்க்கரைதான்சமனாய்க்கூட்டித் திறமாகப்பிசைந்துகொண்டுவெருகடிதானேரம், வாயோடுமண்டலந்தான்கொண்டாயானால் வாங்குமடாக்ஷயகாசமீளைபோமே.

போமடாவஸ்திசுரமஸ்திவெட்டை பொறுக்காதநீர்க்காசம்புண்ணுநெஞ்சில், நாமடாபித்தவெட்டைபித்தபாண்டு நாடாதுகிராணிவகையெல்லாந்தீரும், தாமடாவரோசிகங்களன்னத்தோஷம் தளராதவிம்மலொடுவிக்கல்கக்கல், சாமடாகைகாலிலெரிவுகாந்தல்சாந்தமாம்புளியோடுபுகையுந்தள்ளே. ௧௨௬

பஞ்சதீபாக்கினிச்சூரணம்.

தள்ளவேபஞ்சதீபாக்கினியென்னுந் தளமானசூரணத்தைச் சொல்லக்கேளு, விள்ளவேதிரிகடுகோடேலஞ்சீரகம் விதமாகவகையொன்றுபலமொன்றாக, நள்ளவேயிளவறுப்பாய்ச்சூரணித்து நலமாகவடிகொண்டுசர்க்கரைதான்சேர்த்துத், தள்ளவேதேனெய்யில் வெருகடிதான்கொள்ளத் தூமாகத்தீரும்நோய்செப்பக்கேளே.

செப்புகிறேனுஷ்ணநோய்சூலைவாய்வு சேர்ந்துபித்தவாயுவொடுசிலேத்மரோகம், தப்புகிறேன்பொருமலொடுசெரியாமந்தம் தளமானமபக்கமொடுகிறுகிறுப்பு, வெப்புகிறேனஸ்திசுர மஸ்திவெட்டை வேறானமூலத்தின்வாய்வுதீரும்,செப்புகிறேன்புளிகசப்புபுகையுந்தள்ளு திறமானசூரணத்தைதெரிந்துகொள்ளே. ௱௨௮

நிலவாகைச்சூரணம்.

நலமாகசூர்ணமொன்றுசொல்லக்கேளு நன்றானநிலவாகைசுக்குங்கூட்டிப், பிலமாகமிளகுவாய்விளங்கமோமம் பேராவகைக்கொருபலமேதூக்கிச், சிலமாகரவிமுகத்திலுலரப்போட்டுச் சிதறாமலிடித்துச்சூரணந்தான்செய்து, தவமாகச்சர்க்கரைதான்சமனாய்க்கூட்டித் தவறாமலிருநேரங்கொண்டாற்கேளே. ௱௨௯

கேளப்பாவாயுவென்றதெல்லாம்போகுங் கெடியானபித்தமெல்லாங்கீழ்நோக்கிப்போகும், வாளப்பாவுஷ்ணநோயெல்லாந்தீரும் வளமானபொருமலொடுவிம்மல்தீரும், நாளப்பாசேத்துமநோயெல்லாந்தீரும் நலமானவிக்கலொடுவாந்திதீரும், தாளப்பாவுடம்பெரிவுசுவாசகாசந் தவறுண்டுபோகுமடாசாற்றக்கேளே. ௱௩௰

சாற்றுகிறேனீரருகல்மலபாதங்கள் தளராதவயிறுவிப்மலிரு மல்தீரும், தேற்றுகிறேன்குன்மமெட்டுமகோதரங்கள் தெளிவான வாயுவெல்லாந்தீருந்தீரும், ஆற்றுகிறேன்கெர்ப்பவலிகெர்ப்பரோக மாச்சரியம்புழுக்களெல்லாமகன்றுபோகும், சாற்றுகிறேன்வெந்நீரிற்கொண்டாயானால் கலங்காதேவயிற்றிலுள்ளவியாதிபோமே.

வல்லாரைச்சூரணம்.

போமப்பாசூரணமொன்றுசொல்லக்கேளு புதுமையாம்வல்லாரைப்பாலிற்போட்டு, நாமப்பாவவித்துலர்த்திக்காயப்போட்டு நலமாகச்சூரணித்துப்பலம்பத்தானால், தாமப்பாகிராம்பேலஞ் சாதிக்காயும் தளமானபத்திரியுமாசிக்காயும், தேமப்பாதாளிசப்பத்திரிதிரிபலாதி திறமாகவிளவறுப்பாய்ச்சூரணந்தான்செய்யே.

செய்யப்பாவகையொன்றுபலந்தானென்று திரமாகவிரண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு, பையப்பாசர்க்கரைதான்சமமாய்க்கூட்டிப் பதருமல்வெருகடிதானெய்யிற்கொள்ள, தையப்பாமேகமெல்லாம்தவறுண்டேபோய் சரீரத்திலுள்ளதெல்லாம்சாந்தமாகும் கையப்பாபிரமியங்கிரந்தியெல்லாம் கனமானவுஷ்ணநோய் காணாதென்றே. ௱௪௩

காணாதுநீரருகல்நீரெரிப்பு கண்ணெரிவுதண்புகைச்சல்காணாதோடும், தோணாதேயுடம்பெரிவுமூலச்சூடும் சுருக்கானநீர்ச்சூடும்குளிர்ந்துபோகும், நாணாதுமதுமேகந்தந்திமேகம் நாடாதுக்ஷயரோகம்ஈளினமாகும், கோணாதுதேகமெல்லாங்குளிர்ச்சிகாணுகொண்டுவாவப்பிரேகம்வைத்துக்கொள்ளே. ௱௪௪

சஞ்சீவிச்சூரணம்.

கொள்ளவேசஞ்சீவிச்சூரணத்தைச்சொல்வேன் குணமானசீந்திலடித்தண்டுவாங்கி, விள்ளவேமற்றோலைவாங்கிப்போட்டு வெருளாதேநறுக்கியதையுலரப்போட்டுக், கள்ளவேயிடித்துநன்றாய்ச்சூரணித்துக் கருவாகவடிகொண்டுபடித்தூள்வாங்கி, நள்ளவேமுந்நூற்றிற்சுத்திசெய்து நலமானபொடிபடிக்குஆவின்பாற்படியே.

படியாகவரைப்படிதான்சீனிபோட்டுப் பாங்காகாவியுலர்த்திக்காய்ந்தபின்பு, அடியாகவுரலிலிட்டிடித்துக்கொண்டு அப்பனேசாதிக்காய்சாதிபத்திரி, கடியாகவால்மிளகேலங்கிராம்பு கசகசாதாளிசமுமாசிக்காயும், வடிவாகவிளவறுப்பாய்ச்சூரணித்து வளமாகவகைக்கொருபலந்தான்கூட்டே. ௱௪௬

கூட்டியேயிரண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு குறையாம லாறுபலஞ்சீனிசேர்த்து, நாட்டியவெருகடிதா னெய்யிற்கொள்ளந லமாகத்திருநோய்நவிலக்கேளு, தாட்டிகம்மேகநீரிருபதும்போம்தள மாணபிரமியங்கள்மேகமெல்லாம், வாட்டியவற்றியதோர் தேகமெல் லாம்வளமாகுமஸ்திசுரம் வெட்டைபோமே. ௱சஎ

போமப்பாமூலத்தின்சூடுபோகும் பொல்லாதபித்தவகை எல் லாம்போகும், நாமப்பாகண்ணெரிவுகைகால்காந்தல் நாடாதுமீதக மெல்லாங் குளிர்ச்சியாகும், தாமப்பாவூறலெல்லாம் தவறுண்டே போம்தளமானகபாலத்தின்ரணங்கள்தீரும், வேமப்பாவாலாகச்செ ந்தூரந்தான்வெகுசுறுக்காம்பணவெடையப்பிரேகங்கொள்ளே.

ஏலாதிச்சூரணம்.

கொள்ளவேயேலாதிச்சூரணங்கேள் குணமானலவங்கமொன் றாமிளகிரண்டு, விள்ளவேநாகம்நால்தாளிசமெட்டு விதமாணகூகை நீறுபதினாறாகும், நள்ளவேசுக்கதுதான்முப்பத்திரண்டுநலமானவே லமதுவறுபத்துநாலு, கள்ளவேசர்க்கரைதான்சமனாய்க்கூட்டிக்கல ந்துபுதுக்கலசமதிற் பதனம்பண்ணே. ௱சகூ

பண்ணவேவெருகடிதூ ளிருநோகங்கொள்ளப் பறக்குமடாபித் தமொடுவாதம்வாய்வு, தண்ணவேகிரந்திரண மரிகிரந்திதளமான மேலூறல்சொரிசிரங்கு, நண்ணவேசிலவிஷங்க ளுடாதோடும்நலமா னகுஷ்டமொடுகுறைநோய்தீரும், பெண்ணவேபெரும்பாடுவெலும் புருக்கிப்பின்பாராதேர்டுமின்ன மொன்றுகேளே. ௱ருய

அசுவகெந்தி பலராட்சதத்தைலம்.

ஒன்றான வுலகத்தோர்நோய்கட்கெல்லாம் உரைக்கிறேன்தைல மொன்றுறுதியாக நன்றானவசுவகெந்திபலராட்சத நாம்மதுசொல் லுகிறேநவிலக்கேளு, சென்றானவசுவகெந்தி பலமுவைந்து சிற்றாமு ட்டிபதினைந்துவெள்ளெருக்குநாலு, குன்றானகன்னாரி சிந்திலாவி லாமிச்சுகோரையுடனெய்ச்சட்டி யவுரியெண்ணே. ௱ருக

எண்ணவேநாகத்தைதுளசிவெட்டை இதமான மூலத்தைபல ந்தானாலு, நண்ணவேடகில்நாலுதேவதாருநாலுநலமான கீழ்நாடன் பலந்தானெட்டு, தண்ணவேகொம்பரக்கு பலந்தானெட்டுதள்விவி ட்டுவகையெல்லாம்பதினேந்தாகும், ஒண்ணவேயிடித்து நன்றாயிரு தூணிநீரில் ஒருவிறகாய்த்திட்டுச் சோடசத்தொன்றாக்கே. ௱ருஉ

ஆக்குவாயெள்ளெண்ணெய் சேர்த்தானைந்து அதின் பாதிதயிர்
தண்ணீர்பால்சேரைந்து, தூக்குவாய்கலக்கவகை மருந்துகேளுந்து
டியானதிரிகடுகுதிரிபலாதி, மாக்குவாய்ஆதூரிமதுரங்கோஷ்டம்மா
ஞ்சில்முச்சீரகமும்பூஞ்சாந்துகெந்தம் பாக்குவாய்மஞ்சள்ரோகிணி
செவ்வள்ளிபச்சிலைபூலாமூலங் கிளியூறல்கூட்டே. ௱௰௩

கூட்டுவாய்சதகுப்பி லவங்கப்பட்டைகூறேலம் வகைக்கரைப்
பலமதாக, ஆட்டுவாயாவின்பால்விட்டுநன்ருய் அப்பனேகியாழமெ
ண்ணெய் தனிற்கரைத்து, நாட்டுவாயடுப்பேற்றிக் கொதிக்கும்போ
துநலமாகமுன்னரைக்கியாழம்விட்டு, மூட்டுவாயடுப்பேற்றிமுதிரா
மற்ருன்முன்னவர்க்குப்பூசித்து வடித்திடாயே. ௱௰௪

வடித்திட்டதைலமதுமுழுகும்போது வாகாகத் தீருகிறவியா
திகேளு, பிடித்திட்டமேகத்தின்சூலைபதினெட்டும் போனவாதத்
தின்சூலைதானும், மடித்திட்டவாதசுரம் பித்தவாய்வுமயக்கமொடுசி
லேத்மசுரமாண்டுபோகும், அடித்திட்டுக்கண்ணுபடா பித்தவெட்
டைஎல்லாம் அணுகாதேயக்கினியாமந்தந்தானே. ௱௰௫

மந்தமொடுபாண்டுவகை யெல்லாம்போகும்மைந்தனே கண்பு
கைச்சல்கைகால்காந்தல், பெந்தமாமுடம்பெரிவு சுவாசகாசம்பின்
பாராதோடுமடாமேகமெல்லாம் பந்தமாம்பத்தியங்கள் புளிகசப்பு
பாங்கான புகையோடுபெண்ணுந்தள்ளு, இந்தவகைஎனைப்போலி
யாருஞ்சொல்வா ரிகத்திலுள்ளோர்பிழைக்கவென்றிரங்கினேனே.

வில்வாதிலேகியம்.

இரங்கியேலேகியமொன்று சொல்லக்கேளுஇதமான வில்வாதி
என்றநாமம், யாங்கியேவில்வம்விலாமிச்சைக்கோரை பாங்கானசஞ்
சீவிவகையொன்றுக்கு, தாங்கியேகீழ்நாடன் பலந்தானெட்டுதானி
டத்துக்கல்வெள்ளநீரிற்போட்டு, அரங்கியேசோடசத்தொன்ருகக்
காய்ச்சிஅப்பனேகொம்பரக்கு சேர்தான்ரண்டே. ௱௰௭

ரண்டான தூணிநீரெட்டொன்ருக்கி நினைவாகஎள்ளெண்ணெ
ய்படிதான்சுத்தி, குன்ருனவாவின்பால்படிதானஞ்சுகுலமான கற்க
வகைசொல்லக்கேளு, நன்ருன திரிகடுகுந்திரிபலாதி நலமானகஸ்தூ
ரிமதுரங்கோஷ்டம், கன்ருனவிருசீரமாஞ்சில்மஞ்சள்கருதுகெந்தக்
கிளியூரல்பூஞ்சந்தென்னே.
௱௰௮

என்னவேசெவ்வள்ளி லவங்கப்பட்டை இதமான பச்சையொடுபூலாவேலம், பன்னவேவகையொன்றுபலந்தான்வாங்கிப் பாங்கானவாவின்பால்விட்டேயாட்டி, முன்னவேகியாழமெண்ணெய் தனிற்கரைத்துமோகமாயடுப்பேற்றிக்கமலமாகக், கன்னவேமுதிராமல்கவனமாகக் கணபதியைப்பூசித்து வடித்திடாயே. ௱௫௯

வடித்திட்டதைலமது முழுகும்போதுவாகாத்தீருகிற வியாதிகேளு, மிடித்திட்டமேகநீ ரிருபதும்போம்பேரானபித்தவகைநாற்பதும்போய், துடித்திட்டகுன்மமெட்டுந் தொலைந்துபோகுந்தொலையாதசிரசில்நோய்சொல்லாதோடுங், கடித்திட்டமேகவகை வாட்சியெல்லாங்காணுமலோடுமடா கருதிப்பாரே. ௱௬௰

குமரித்தைலம்.

கருதியேநீகேளுபுலத்தியனேயையா கருவானகுமரியிட தைலஞ்சொல்வேன், விருதானகுமரிச்சார்படியிரண்டுவெள்ளாவின்பாலதுதான்படியிரண்டு, கருவானஎள்ளெண்ணெய்படியிரண்டு சாற்றுகிறேன்கற்கவகைதிரிகடுகுகோஷ்டம், மருவானமாஞ்சிலொடுதிரிபலைச்சீரம்மதுரமொடுபூஞ்சாந்தோ டேலமென்னே. ௱௬௧

என்னவேபேச்சையிலைபூலாமூலம் இதமானலவங்கப்பத்திரியும்பட்டை, அன்னவேசெவ்வெளியக்கிராகாரம் அருளானகஸ்தூரிலவுங்கங்கெந்தந் தின்னவேரோகணியுஞ்செண்பகப் பூயானைதிப்பிலியுமந்திஷ்டிசோம்புமஞ்சள், பன்னவேவகையொன்று பலமரைதான்வாங்கிப் பரிவானவாவின்பால் படிவிட்டாட்டே. ௱௬௨

ஆட்டியேகரைத்தெண்ணை சாற்றினுள்ளே அப்பனேயடுப்பேற்றிக்கமலமாக, மூட்டியேமெழுகுபதமாகவாங்கி முதிராமல் வடித்ததனைச்சீசாவில்விட்டு, நாட்டுவாய்தானியத்தில் வைத்துமூடிநலமாகமண்டலங்கால் சென்றபின்பு, தாட்டிகமாம்மண்டலந்தான் முழுகும்போது சாதகமாய்த்தீருநோய் சாற்றக்கேளே. ௱௬௩

கேளடாமேகமென்றதெல்லாம்போகும்கெடியான வஸ்திசுரம்வெட்டையாகும், தாளடாபித்தமெல்லாஞ்சாந்தமாகுஞ் சரீரத்தில்வறட்சிமுதலூறல்போகும், வேளடாகுன்மமெட்டும் பாண்டுமாவும்வெளுப்பானதேகமெல்லாம்வண்டுபோலாம்,வாளடாவயித்தியர்க்காய்த்தைலம்சொன்னேன் வளமான மனமுடையோய்மகிழ்ந்துபாரே. ௱௬௪

மகிழுவேகொம்பரக்குத்தைலங்கேளு மகத்தானகொம்பரக்குப்பலந்தானெட்டு, நெகிழுவேநுணிநீரொட்டொன்ருக்கி நிசமானதாளிக்குள்வடித்துவிட்டுத், தாழுவேஎள்ளெண்ணெய் சேர்தானஞ்சுதயிர்தண்ணீர்சேரிரண்டுபால்சேரஞ்சு, நிசழுவேகாடியது சேர்தான்ரண்டு நிசமாகக்கற்கவகை சொல்லக்கேளே. ௱௬௫

கேளப்பாசதகுப்பைகடுகுரோணி கிளியூறல்பூஞ்சாந்துபச்சைப்பூலா, நாளப்பாசெவ்வெள்ளிலவங்கப்பத்திரி நலமானலவங்கத்தோல்மாஞ்சில்கோஷ்டம், தாளப்பாகஸ்தூரிமதூரங்கெந்தந் தயவாகவிருசீரம்விருகுவேலம், ஆளப்பாவகையொன்றுகருஞ்சிரண்டு அப்பனேயாவின்பால்விட்டுஆட்டே. ௱௬௬

ஆட்டுவாயெண்ணைக்குட்கரைத்து அடுப்பேற்றிமெழுகுபதமானவாறே, நாட்டியேவடித்ததனைமுழுகும்போது நலமாகத்திருகிறவியாதிகேளு, தாட்டியமாம்பித்தவெட்டையஸ்திசுரம்போம் தலைமயக்கம்வாயூறல்சாந்தமாகும், வாட்டியதோர்சீதசுரம் மாண்டுபோகும் வற்றியதோர்தேகமெல்லாமூறும்பாரே. ௱௬௭

ஊறுமேகனவெட்டைகனசுரங்கள் உத்தமனேகனப்பாண்டுவெளுத்ததேகந், தேறுமேதேகத்தில்வலிகடுப்புத் திறமானசூலையெல்லாந்தீருந்தீரும், நாறுமேகற்றுழைபுறங்கைவீசி நலமானதழுதளையுநாடாதோடும், சீறுமேகாசமெல்லாந்தீர்ந்துபோகுந் திறமானவொன்றையிட்டொருநாளென்னே. ௱௬௮

மிருகாமலத்தைலம்.

என்னவேபத்தியந்தான்புளிகசப்பு இதமானபடையோடுபெண்ணுமாகா, தள்ளவேதைலமொன்றுசொல்லக்கேளு தளமானமிருகாமலத்தைலஞ்சொல்வேன், நன்னவேமிருகாபழச்சாறுபடிரண்டு நலமானகாணிச்சாறுபடியிரண்டு, பன்னவேகுமரிச்சாறுபடியிரண்டு பாங்கானசெவ்விளநீர்படிதானெட்டே. ௱௬௯

படியானசிறுகீரைசாறுபடிரண்டு பழுதில்லாவாவின்பால்படிதான்ரண்டு, செடியானயெள்ளெண்ணெய்படிதான்மூன்று சேர்க்கவிதிற்கற்கவகைமருந்துகேளும், கொடியானமதூரமொடுகோஷ்டமேலங் குரோசாணிபச்சையிலைப்பூலாமூலம், கடியானகஸ்தூரிமாஞ்சில்மதூரங் கருவானபத்திரியுஞ்சாதிக்காய்கூட்டே. ௧௭௰

கூட்டுவாய் லவங்கப்பத்திரியும்பட்டை கொடிதான திரிகடுகு திரிபலாதி, நாட்டுவாய்பூஞ்சாந்து சோம்புவால்மிளகுநலமானவகை பொன்று கழஞ்சுமூன்று, கூட்டுவாயாவின்பால் விட்டுநன்றாய் அப்பனே சாறெண்ணெய் தனிற்கரைத்து, மூட்டுவாயடுப்பேற்றிக் கமலமாக முதிராமல் கணபதிக்குப் பூசைபண்ணே. ௧௭௧

பண்ணியேமெழுகுபதந் தனில்வடித்துப் பாங்காகமுழுகிவரத்தீருநோய்கேள், கண்ணிலே தாகமோ டந்திமாலை கருவானநேத்ரநோய் தொண்ணூற்றாறு, மண்ணிலே பித்தவெட்டை பித்தவாய்வு மயக்கமுடன்ஸ்திவெட்டை மாண்டுபோகும், கண்ணிலேயுடம்பெரிவுகைகால்காந்தல் தலமானவுஷ்ணநோய் சாராதென்னே. ௧௭௨

சந்தனாதித்தைலம்.

சாரவேசந்தனாதித் தைலந்தன்னை சார்பானபுலத்தியனேசொல்லக்கேளு, சேரவேமலர்க்காவில் சந்தனத்தூள் செப்புகிறேனைடையொன்றுதூக்கியேதான், வாரவேவிலாமிச்சை வெட்டிவேரை வகையுடன் சீந்திலொடு சிற்றாமுட்டி, காரவேபேராமுட்டி பேராமல்லி கருவானசிற்றாமல்லி யகலமாமே. ௧௭௩

ஆமப்பாநன்னாரிப் பாடகந்தான் அப்பனேவகையொன்று பலந்தான்நாலு, போமப்பாவிருதூணி வெள்ளநீரில் பொடியாகவிடித்திடித் தடுப்பிலேற்றி, நாமப்பாசோடசத் தொன்றாகக்காய்ச்சி நலமானபாண்டத்தில் வடித்துக்கொண்டு, தாமப்பா செவ்விளநீர்படியிரண்டு தப்பாமல்காணிச்சாறு படியிரண்டுவாரே. ௧௭௪

வாரப்பாசிறுகீரை படிதானொன்று வாகானபொடுதலைச்சாறு படியொன்று, சேரப்பாவல்லாரை படிதானொன்று சிறுசின்னிச்சாறுதான் படிதானொன்று, காரப்பாபொற்றலைச் சாறுபடி யொன்று ஆமப்பாகர்ப்பூரவல்லிச்சாறு அழகாகக்கூடவிட்டுப்படிதானென்றே.

நன்றப்பாதான்றியிட விழுதின்சாறு உத்தமனே எள்ளெண்ணெய்படிதான் மூன்று, நன்றப்பா சிறுநெய்தான் படிதானொன்று நலமானவாவின்பால் படிதான்நாலு, குன்றானதயிர் தண்ணிப்படியிரண்டு குறையாமல் பாண்டத்தி லூற்றிக்கொண்டு, சென்றுநீயடுப்பிலே கொதிக்கவைத்துத் திறமானசுடைசரக்குச் சொல்லக்கேளே.

கேளப்பாதிரிகடுகு திரிபலாதி கிருபையாங்கஸ்தூரி மதுரமே லம், தாளப்பாபூஞ்சாந்து கிளிபூறற்பட்டை தளமானலவங்கப்பத் திரியும்பட்டை, காளப்பாகிராம்பு சாதிக்காய்ப்பத்திரி நலமானபச் சைபிலைமூலாமூலம், ஆளப்பாசெவ்வள்ளி செண்பகப்பூ அப்பனே கெந்தமொடு சீரமரண்டே. ௧௭௭

ரெண்டானசெங்கழுநீர் கோஷ்டமக்கிரா நிலையான மந்திஷ்டி பலகைமஞ்சள், செண்டானசந்தனமு முத்தக்காசும் திருக்கானவ லம்புரிக்கா யிடம்புரிக்காய், குன்றுமல்வகையொன்று பலமரைதா ன்வாங்கி குலவானவாவின்பால் விட்டேயாட்டி, வென்றான் ※மேஷ ப்பால்படி யிரண்டில்கரைத்துவீற வேவெண்ணையிலே விட்டுக்கொ ள்ளே.

கேளப்பாவடுப்பேற்றிக் கமலமாகக் கிருபையாய் மெழுகுபத ந்தன்னிலேதான், நாளப்பாகணபதிக்கு பூசைபண்ணி நலமானகம் பிளியால் வடித்துக்கொண்டு, தாளப்பாகுங்குமப்பூ கோரோசனையு ம் தளமானபுழுகதிலே கழஞ்சுவீதம், கேளப்பா பொடித்திட்டுக்க லசத்துள்ளே குணமாகத்தாளியதில் வைத்துமூடே. ௧௭௮

மூடியேமண்டலங்கால் சென்றபின்புமுழுகிவரச்சீயக்காயரை ப்பதாகும், நாடியேதீருகிற வியாதிகேளு நாடாதுமேகமென்றதிரு பதுந்தான், சாடியேநீரிழவு நீரருக்கால்தள்ளுண்டு போகுமடாக்ஷ யந்தானெட்டும், காடியேகண்ணெரிவு கண்புகைச்சல் கையெரிவு காலெரிவு மோடுங்காணே. ௧௭௯

ஓடுமடாபிரமியங்கள் ரணக்கிரந்தி உத்தமனேகற்றாழை நாற்ற ந்தீரும், சாடுமடாவஸ்திசுர மஸ்திவெட்டை சரீரத்தில்மயக்கமெல் லாஞ்சாந்தமாகும், போகுமடாவிந்திரகண்டி புண்புரைகள்போகும் தேமேடா பெண்மேலே மோகமெத்தச்சிக்காதேவலையினுள்ளேதெ ளிக்துநில்லே. ௧௮௦

தெளிந்துகொண்டுமாயத்திற்சிக்கவேண்டாம் தேகத்திலுள்ள நோய் சிதறிப்போகும், அளிந்ததொரு குட்டமொடு சொறிசிரங்கு ம் அப்பனேயுள்ளவெட்டை யாறிப்போகும், களிந்திந்ததயிலமது முழுகும்போது கன்றானபுளிபோடு புகைகசப்பு, வளிந்துமிகவாய் வென்றபதார்த்தந் தள்ளுவளமாகுஞ்சரீர மெல்லாம்வருணமாமே.

※ மேஷம் - வெள்ளாடு.

பொன்னாங்காணித்தைலம்.

ஆமப்பாபொன்னாங்காணித், தைலங்கேளுஅப்பனே காணிச்சாறுபடியிரண்டு, நாமப்பாகரிச்சாலைப்படியொன்று நலமானநெல்லிக்காய்ச் சாறுபடியொன்று, தாமப்பாஎள்ளெண்ணெய் படியிரண்டுதெப்பாமலாவின்பால் படியிரண்டு, வேமப்பாமதுரமது பலமிரண்டுவிருதானமுலைப்பாலாலரைத்துப்போடே. ௱௮௩

போடப்பாமெழுகுபதந் தனில்வடித்துப்புகழாகமுழுகிவரத்தீருநோய்கேள், நீட்டப்பாநேத்திரநோய் தொண்ணூற்றும் நிலைமைகெட்டகாசமெல்லா நீங்கிப்போகும், வாட்டப்பா பித்தமெல்லாம்வாங்கிப்போகும்வளமாகநேத்திரங்க ளொளியேமீறும், நாட்டப்பாவுஷ்ணமெலாந்தீரும்நலமான கீழ்க்காய்நெல்லி தைலங்கேளே.

கீழ்க்காய்நெல்லித்தைலம்.

கேளப்பாகீழ்க்காயின் நெல்லித்தானுங் கிருபையாய்த் தூக்கிடித்துத்தூணிநீரில், வாளப்பாவெட்டொன்றாய் வடித்துக்கொண்டு வளமானவெள்ளெண்ணெய்ப்படியிரண்டு, நாளப்பாவாவின்பால்படியிரண்டு, நலமானசீரகந்தான்பலமிரண்டுவேளப்பாபாலிலேயரைத்துவிட்டு விருதாகமெழுகுபதம் வடித்துவாங்கே. ௱௮௫

வாங்கியேமுழுகிவரப் பித்தவெட்டை மயக்கமொடு மஞ்சள்காமாலைதீரும், தாங்கியேவாந்தியெல்லாம் தவருண்டேபோம் தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும்,தாங்கியேயுட்சிரங்கள் தீர்ந்துபோகும் தீரமுடனேயிதனைச் செய்துபாரு, ஏங்கியேதிரியாதே மனஞ்சோம்பாதே எளிதல்லநோயப்பா விரங்கிப்பாரே. ௱௮௬

ஆதண்டத்தைலம்.

பாரப்பாசிரசிலுள்ளகுடுதீரப் பக்குவமாய்தைலமொன்றுசொல்லக்கேளு, நேரப்பா லாதண்டை நொச்சிசங்கு நினைவாக வெருக்கோடு சிற்றாமுட்டி, ஆரப்பாவகை யொன்று பலம்பத்தாகும் அப்பனே தூணிநீ ரெட்டொன்றாக்கிக், காரப்பாவெருக்கினிட பழுப்புக்சாறு கருவானபடியொன்று பழச்சாறென்றே. ௱௮௭

ஒன்றப்பா எள்ளெண்ணெய்ப்படிதானென்று உத்தமனேவேப்பெண்ணெய் படிபரைதான்கூட்டி, ஏன்றப்பாதிரிகடுகு வோமம்பூண்டு நலமானவசம்போடு மஞ்சள்கூட்டிக், கன்றப்பாவரைத்தெண்ணெய் தனிற்கரைத்து கருவானமெழுகுபதந் தனில்வடித்து, மொன்றப்பா முழுகிவரத் தீருநோய்கள் முதலான சிரசிலுள்ள குலைபோமே. ௱௮௮

சூலைபோம்வாயுவெல்லாஞ் சொல்லாதோடுஞ் சுருக்கானவாதத்தின்சூலைதீரும், வாலையாந்தியிர்வாதமிரைப்புத்தீரும் வயிற்றிலுள்ளவாயுவெல்லாம்வாங்கிப்போகும், சூலைபோஞ்சிறுகடுப்புநேத்திரக்குததல்சொரிசிரங்குகரப்பனோ டிணங்கள்தீரும், ஆலப்பாபத்தியந்தான்புளிகசப்பு, அப்பனேபுகைவாய்வு பதார்த்தந்தள்ளே. ௱அ௯

பதின்மூன்றுசன்னிக்குந் தைலம்.

தள்ளவேசன்னியெல்லாங்கடலேபுக்கும் தயவாகத்தைலமொன்றுசொல்லக்கேளு, நள்ளவேவேப்பெண்ணெய்ப்,புங்கவெண்ணெய்நலமானபுன்னையெண்ணெய் பசுவினெய்யும், கள்ளவேகாட்டினுமணத்தினெண்ணெய்க் கருவாகச்சமன்கூட்டியிதிலேவார்த்து தள்ளவேமுசுறுமுட்டைகாலதாகு கடையிலேயெண்ணெய்படிகாலதாமே. ௱௯ய

காலானபடிவீதஞ் சேர்த்துக்கொண்டு கருவான.குக்குடத்தின்முட்டைபத்து, மாலாகமஞ்சளையுங்கூடிவிட்டு மயக்காதகடைமருந்துசொல்லக்கேளு, சாலானசாதிலிங்கந் திருமுகவேர் சமர்த்தாணகெந்திரசம் பாஷாணந்தான், ஆலானகாபியுடன் மிளகுதிப்பிலிஅமுகாளயானைதிப் பிலியும்போடே. ௱௯௧

போடுவாய் லவங்கமொடு நேர்வாளந்தான் புகழான கழஞ்சுநிறை சமனுப்பக்கூட்டி, நாடுவாய்கொடிவேலி கியாழத்தாலே நலமாகச்சாம மொன்றரைத்துக்கொண்டு, சாடுவா எண்ணெயிலே தான்கரைத்துச் சதுராகக்கொதிக்கையிலே யெருக்கம்பாலும் கோடுவாய் கொடிக்கள்ளி சதுரக்கள்ளி குணமான விலைக்கள்ளிப்பாலுங்கூட்டே. ௱௯௨

கூட்டியே திருகுகள்ளி காணுங்கள்ளி கூசாதேபடர்ந்த முள்ளிக்கள்ளி சாட்டியேபாலவகை தானுழக்குமாகும் சாதகமாயெண்ணெயடன் கலந்துகொண்டு, மூட்டியே கமமைாந் தீயிலன்பாய்முதிராமற் கொதிக்கையிலே கஸ்தூரிகேளு, நீட்டியேயஞ்சுபண முலைப்பாலாலே நீயரைத்துக் கறைத்தெண்ணெய் தன்னில்வாரே. ௱௯௩

வார்த்திடுவாய் முலைப்பால்தான்படிகால்வீதம்வளமான தேசிசிப்பால் படிகாலாமோ, சேர்த்திடுவாய் காட்டெருமைப்பால்தான் திரியாமலெண்ணெயிலே விட்டுக்காய்ச்சி, ஆர்த்திடுவா யாற்றலறியிலைகால்போடு அன்பாகவெள்ளுள்ளி யரைத்துப்போடு, மூர்த்திடவேமெழுகுபத மானவாறேமுன்னவனைப்பூசித்து வடித்திடாயே

---

* குக்குடம்-கோழி காணுங்கள்ளி-இலைக்கள்ளி.

வடித்திட்டதைலமதைபானையிலேற்றி வாகுகோரோசனையுங் கழஞ்சிபொடித்திட்டு, யிடித்திட்டசன்னிவகை பதின்மூன்றுகும் பேரானகரண்டிநிறையீய்ந்தாயானால், துதித்திட்டசன்னியெல்லாந் துலைந்துபோகும் துடியானவிசுவுக்குத்துவளைபோட, நடித்திட்ட நரம்பெல்லாமிருதுவாகும் நலமில்லாவிசுவெல்லாநளினமாமே. ௱௯௫

நிலப்பனைக்கிருதம்.

நள்ளவேகிருதமொன்றுசொல்லக்கேளு நலமானநிலப்பனையு மொதியம்பட்டை, விள்ளவேகருங்காலிநாகப்பட்டை விதமான * வேந்தனிடபட்டைதானும், அள்ளவேவகையொன்றுபலம்பத்தாக அப்பனேயிடித்துநன்றாயிருதூணிநீரில், தள்ளவேசோடசத்தொன்றாகக்காய்ச்சித் தன்மானவாவின்பால்படிதான்ரண்டே. ௱௯௬

ரெண்டப்பாவாவின்பால்படிதான்ரண்டுநினைவாகப்புளியாரைச்சாறுபடியொன்று, விண்டப்பாகோரையிடதண்டுச்சாறு விதமாகப்படியதுதான்கூடவிட்டு, நன்றப்பாபொன்முசட்டைசிறுகாஞ்சோறி நலமானவிலாம்வித்துகொத்தமல்லி, கன்றப்பாதிரிகடுகுதிரிபலாதி கருவானபேரீச்சுமுந்திரிகையாமே. ௱௯௭

ஆமப்பாகர்க்கடகமாம்பருப்பரத்தை அப்பனேகாட்டத்திகீழ்க்காய்நெல்லி, நாமப்பாவதிவிடையம்கூவிளத்தின்பிஞ்சு நலமானவிளாம்பிஞ்சுமாதுளையின்பிஞ்சு, தாமப்பாசந்தனமுஞ்சாத்திரபேதி தளமானபுளிவிரைத்தோல்முத்தக்காசு, வேமபபாசிறுநாகம்லவங்கப்பட்டை விதமானகுரோசாணியோமமாமே. ௱௯௮

கூட்டப்பாவருந்துவெள்ளையமுக்குறுவேர் கூசாதேவகைக்கிரண்டுகழஞ்சுவீதம், ஆட்டப்பாவாவின்பால்விட்டரைத்து அப்பனேநெய்தனிலேகரைத்துவிட்டு, மூட்டப்பாவடுப்பேற்றிக்கமலமாக முதிராமல்மெழுகுபதமாகும்போது, நாட்டப்பாவடிவுகொண்டு பரணிசெய்து நலமாகவிருநோங்கழஞ்சுகொள்ளே. ௱௯௯

கொள்ளவேபெரும்பாண்டுவெளும்புருக்கி கூறுனபிரமியங்கள்கடுப்புமூலம், விள்ளவேகிராணிவகையெல்லாந்தீரும் விதமானசுக்கிலந்தானிருக்கும்பாரு, கள்ளவேசடம்வெளுப்புகைகால்காந்தல் தளமானகுடுயெரிப்புநீர்கடுப்பு, நள்ளவேதீருமடாபத்தியங்காரே நலமாகச்சீரகக்கியாழங்கொள்ளே. ௨௱

---

* வேந்தன்பட்டை-அரசன்பட்டை.

பொன்னாங்காணிகிருதம்.

கொள்ளவேகிருதமொன்றுசொல்லக்கேளு குறிப்பானகாணிச்சாறுபடிதானொன்று, நள்ளவேபொற்கையான்சாறுபடியொன்று நலமானபழச்சாறுபடியரைதான்விட்டு, விள்ளவேயாவினெய்படிதானொன்று விருதானவாவின்பால்படிதானொன்று, தென்னவேமதூரமொடுபலந்தான்ரண்டு தெளிவானவாவின்பால்விட்டுஆட்டே.

ஆட்டியேசெய்க்குள்ளேகரைத்துவிட்டு அடுப்பேற்றிமெழுகுபதமானவாறே, நீட்டியேசாதிக்காய்சாதிபத்திரி நினைவாகக்கோரோசனங்கற்கண்டப்பா, நாட்டியேகழஞ்சுநிறைபொடித்துப்போட்டு நலமாகக்கிண்டிவைத்துக்கரண்டிவீதம், மூட்டியேயிருநேரங் கொண்டாயானால் முக்கியமாய்த்தீருமடாமூலச்சூடே. உ௱உ

சூட்டுடனேயுஷ்ணநோயெல்லாந்தீரும் சுகமாகமேலெரிவுகைகால்காந்தல், காட்டுடனேயுலத்துகின்றமேகந்தீரும் நணுகமதுவயிற்றிலுள்ளவெரிகட்கெல்லாம், வாட்டுடனேநேத்திரமெல்லாங்குளிர்ச்சியாகும் வளமாகும்வாய்நாற்றம் விட்டுப்போகும், தீட்டுடனேயிரங்குகின்றபிரமியந்தான் தீருமடாபுளியாரைக்கிருதங்கேளே. ()

புளியாரைக்கிருதம்.

கேளடாபுளியாரைச்சாறுபடியொன்று கிருபையுள்ளவள்ளிச்சாறுபடிதானொன்று, நாளடாகாணிச்சாறுபடி தான்ரண்டு நலமானசெவ்விளநீர்படிதான்ரண்டு, தாளடாவாவினெய்சேர்தானஞ்சுஆளடாசீரகமுமாசிக்காயும் அப்பனேமதூரமொடுகழஞ்சுநாலுநாளே.

நாளப்பாவாவின்பால் விட்டேயாட்டி நலமாக நெய்சாற்றிற்கரைத்துவிட்டு, வேமப்பாவடுப்பேற்றி மெழுகதாமால் விருதாகவடித்துமே பொடிதான்கேளு, காளப்பாபத்தியமேலர்மாண்டிகருவாகக்கழஞ்சிரண்டுபொடித்துத்தூவி, ஆளப்பாகற்கண்டுபலந்தானொன்று அப்பனேபொடித்துவிட்டு காண்டிநிறையாமே. உ௱௫

ஆமப்பாவிருநேரமண்டலங்கொள் அப்பனேபித்தவெட்டைபித்தவாய்வு, தாதப்பாவெரிச்சலோடுநீர்சுரக்குந் தளமானமயக்கமெல்லாந்தவறிப்போகும், காமப்பாவாயூறல்ரோசியங்கள் நாடாதுபித்தமெல்லாநடுங்கியோடும், போமப்பாவாந்திமுதல் சர்வமுறும்புதிதாகவின்னமொரு கிருதங்கேளே. உ௱௬

வல்லாரைக் கிருதம்.

கேளப்பாவல்லாரைக்கிருதஞ்சொல்வேன் கெடிதானவல்லார ச்சாறுபடியொன்று, தாளப்பாகாணிச்சாறுபடிதானென்று தமமர ணபொடுதலைச்சாறுபடியொன்று, நாளப்பாபழச்சாறு படியரைதா ன்விட்டுகலமானவாவினெய்படிதான்ரண்டு, ஆளப்பாவாவின்பால்ப டிதான்ரண்டு அப்பனேகற்பவகைசாதிக்காயே. ௨௱ள

காயோடுபத்திரியும்மாசிக்காயும்கருவானசிங்கியொடு காட்டா த்திப்பூ, தாயொடுமிளகேலங்கிராம்பு தளமானமதுரமொடு வகை யொன்றுக்குப், பாயொடுமிருகழஞ்சுநிறைதான்தூக்கிப் பருவமா யாவின்பால்விட்டேயாட்டி, வாயோடுகரைத்து விட்டடுப்பிலேற்றி வளமாகமெழுகுபதந் தனில்வடித்தே. ௨௱அ

வடித்திட்டுச்சீனிரண்டு பலந்தான்தூக்கிவாகாகப் போட்டதி லேகிண்டிக்கிண்டிக், கடித்திட்டுக்கரண்டிநிறைகொண்டாயானால் க லங்காதேமண்டலத்தில்தீருநோய்கேள், தடித்திட்டமேகவகையெல் லாந்தீரும்தளமானகுளிர்ச்சியாஞ்சரீரமெல்லாம், வெடித்திட்டரண ங்கிரந்திவிழவாய்ப்போகும் விருதானபிரமியமும் விட்டுப்போச்சே.

போச்சப்பாரசபஸ்பம்வைத்துக்கொள்ளு புகழானவேவகை சூலைபோகும், காய்ச்சப்பாகுஷ்டமொடுசொரிசிங்கு கருவான * சி ங்குவைநோய்காணுதோடும், வீச்சப்பாகிரந்தியொடுயோனிப்புற்று விதமான புண்புரைகள்விழலாய்ப்போகும், மாச்சப்பாசீருகில் கு றிபெறிப்புமைந்தனேயஸ்த்திரண மாறிப்போமே. ௨௱௰

கூழ்பாண்டகிருதம்.

ஆறுமே கூழ்பாண்டக்கிருதங்கேளு அம்பனேபூசினிக்காய்ச் சாறுபடிரண்டு, நாறுமேதாழைவிடவிழுதின்சாறுஒன்றுகப்படியொ ன்றுதென்னம்பூச்சாறு, காருமேபடியொன்றுகூடவிட்டுக் கலங்கா தேகுமரிச்சாறுபடிதானென்று, காருமேசெவ்விளநீர்படிதானென் றுகனமானவாவினெய் படிதான்ரெண்டே. ௨௱௧௧

ரெண்டானதற்குவகைசொல்லக்கேளு நிலையானசாதிக்காய்சா திபத்திரி, பண்டானசாதிக்காய்திரிபலாதிபாங்கான சீரகமுமேலம் வால்மிளகுகுன்றுனகாட்டத்திகர்க்கடசச்சிங்கிகூருன மல்லியொடு குரோசானியோமம், நன்றுகக்கழஞ்சுநிறைமூன்றதாகநலமான வா வின்பால்விட்டுஆட்டே. ௨௱௧௨

* சிங்குவை-நாக்கு.

ஆட்டியேயாவின்பால்படிரண்டுக்குள் அப்பனேகரைத்துவிட் டடுப்பிலேற்றி, காட்டியேமெழுகுபதமாகும்போது நலமாகபடிரெ ண்டுகலசத்துள்ளே, காட்டியேகற்கண்டுபலந்தான்ரண்டு கருவாக பொடித்திட்டுக்கரண்டிவீதம், மூட்டியேமண்டலங்கள் கொண்டா யானல்மூதண்டபிரமியங்கள் மேகம்போமே. உ௰௩

போமப்பா வுஷ்ணங்களெரியுங்காந்தல்பொல்லாத நீர்க்குத்து குறியெரிப்பு, காமப்பாவஸ்திரணமஸ்திவெட்டை நாடாதுகிராணி யெல்லாநளினமாகும், தாமப்பாவெலும்புருக்கிமாலையெல்லாம் தவ ருண்டேபோகுமடாபித்தமெல்லாம். ஆம்பப்பா வப்பிரேகம்போட்டு கொள்ளுஅணுகாதுமேகநீரற்றுப்போமே. உ௧௪

தூதுளைக்கிருதம்.

அற்றுப்போம்தூதுளைக்கிருதங்கேளும் அப்பனேதூதுளையெ டைதானென்று, கற்றுப்போநன்முள்ளிகண்டங்கத்திரி கருதுசிறு காஞ்சேரியாடாதோடை, சற்றுபோம்மிளகுதிப்பிலி கடுக்காய் சு திரானதூரால்பையம்வகையொன்றுக்கு, நற்றுப்போம் பலம்நாலு கொண்டிடித்து நலமாகவிருதூணிநீரிலூட்டே. உ௧௫

ஊட்டியேசோடசத் தொன்றாகக்காய்ச்சிஉத்தமனே வடித்து வொருபாண்டத்தூற்றி, நாட்டியேயாவினெய்படிதான்ரண்டுநலமா னவாவின்பால்படிதான்ரண்டு, காட்டியேதிரிகடுகுதிருபலாதிகருவா னதாளிசங்கோஷ்டமக்கிரா, வாட்டியேவாய்விளங்கஞ் சீரகமுமோ மம்வான்மிளகோடரத்தைரண்டுமேலந்தானே. உ௧௬

ஏலமொடு கிராம்புசாதிக்காய்பத்திரி எடுத்திடுவாய்வகையொ ன்றுகழஞ்சுமூன்று, ஆலமொடுமாவின்பால் விட்டேயாட்டி அப்ப னேநெய்தனிலேகரைத்துவிட்டு, ஞாலமொடுமெழுகுபதமாகுநேர ம்நலமாகவடிவுகொண்டு காண்டிவீதம், சாலமேமண்டந்தான்கொ ண்டாயானல் கருவானக்ஷயமெட்டுங்காணுதென்றே. உ௧௭

காணுதயீளையோடிருமல்காணக் கலங்காதே சேத்துமநோய் கொண்ணூற்றாறும், நாணியேமேகமெல்லாநாடாதோடும் நலமான வுஷ்ணநோயெல்லாந்திரும், ஆணுமேயிளைவிறைப் பற்றுப்போகும் அப்பனேவாயுவென்றதெல்லாந்திரும், தோணுமேகுண்டலமாம்வா ய்வுதீரும் குறிப்பாகவின்னமொருசேதிகேளே. உ௧௮

கண்டங்கத்திரிக்கிருதம்.

கேளடாகண்டங்கத்திரிகிருதஞ்சொல்வேன் கிருபையாங்கண் டங்கத்திரிதூக்கப்பா, நாளடாநன்றானசிறுகாஞ்சோரி நலமானதூ துவளைசங்குமூலம், வாளடாவகையொன்றுபலந்தானஞ்சு வகை யாகவடித்துயிருதூணிநீரில், தாளடாசோடசத்தொன்றாகக்காய்ச் சித் தப்பாமல்வடிகொண்டுபொண்டத்திலூற்றே. ௨௧௯

ஊற்றியேயாவினெய்படிதான்ரண்டு உத்தமனேயாவின்பால்ப டிதான்ரண்டு, தாற்றியேகற்பலகைசொல்லக்கேளு தளமானதிரிகடு குதிரிபலாதி, ஏற்றியேயேவமோடக்கிருகாரம் இதமானகிரும்புசா திக்காய்பத்திரி, ஆற்றியேதாளிசம்லவங்கப்பட்டை அரத்தைரண் டுசேரம்ரண்டோமமாமே. ௨௨௰

ஆமப்பாவகையொன்றுகழஞ்சிமூன்று அப்பனேயாவின்பால் விட்டேயாட்டி, நாமப்பாநெய்தனிலேகரைத்துவிட்டு நலமாகமெ ழுகுபதந்தனில்வடித்து, தாமப்பாகரண்டிநிறைகொண்டாயானால் தவருண்டேசயகாசமெல்லாந்தீரும், வேமப்பாவலிப்பிசுவும்வெகு ண்டுபோம் விருதானவயிறுவிம்மல்தளரும்பாரே. ௨௨௧

பாரப்பாவிஷகடிகளெலிகடிகள்தீரும் பதறுகின்றவலிப்பெல் லாம்பரிந்துபோகும், நேரப்பாகுன்மமெட்டுநீங்கிப்போகும் நிலையா ணமந்தாரகாசநீங்கும், வாரப்பாசேத்துமனேயெல்லாந்தீரும் வள வானவாய்வெல்லாமாண்டுபோகும், ஆரப்பாதாளகத்தினபற்பங்கூ ட்டி அப்பனேமண்டலங்கொள்ளகன்றுபோமே. ௨௨௨

கணத்தெண்ணெய்.

போமப்பாகணத்தெண்ணெய்சொல்லக்கேளு புகழ்முத்துக் கொட்டையெண்ணெய்படிதானொன்று, நாமப்பாவகையானசாறு நலமானகுமரிச்சாறீருள்ளிச்சாறு, வேமப்பாகோவைச்சாறுபுளியா ரைச்சாறு விதமானகர்ப்பூரவள்ளிச்சாறு, தாமப்பாவகையொன்று சாறுபடிநாலாம் தப்பாமலெண்ணையிலேகூடவாரே. ௨௨௩

வார்த்தப்பாசாதிக்காய்சாதிபத்திரி மைந்தனேமோசுக்காய்க ர்க்கடச்சிங்கி, ஏத்தப்பாகோஷ்டமோடக்கிருகாரம் இதமானசீரம் ரண்டுவெந்தயந்தான், காத்தப்பாலவங்கப்பத்திரியும்பட்டை கரு வானவெள்ளுள்ளிவகையொன்றுக்குச், சாத்தப்பாகழஞ்சுநிறைவா ங்கியேதான் வளமானவாவின்பால்விட்டுஆட்டே ௨௨௪

ஆட்டியேவெண்ணெயிலேகரைத்துவிட்டு அப்பனே பால்படி பாலடுப்பிலேற்றி, நாட்டியேமெழுகுபதமாகவேதான் நலமாகவடி கொண்டுகலசத்துள்ளே, கூட்டியேகோரோசனைக்குங்குமப்பூகுண மானசாதிக்காய்கழஞ்சுவீதம், ஆட்டியேபொடித்திட்டுக் கஞ்சுகி றையாகஅப்பனேகொடுத்துவரச் சொல்லக்கேளே. ௨௨௫

கேளடாகண்டவெட்டைகணசுரங்கள் கெடியான மாந்தமோ டுப்பிசங்கள், நாளடாவுலர்த்துகின்ற ரணங்களெல்லாம்நலமாகவா றுமடா கெர்ப்பவெட்டை, தாளடாகனப்பாண்டுவெளுத்த தேகம் தளமானநீரிழவுவிடாதசூடு, வேளடாவுடம்பூறு முஷ்ணம்போகும் வெகுசுறுக்காயின்னமொரு சேதிகேளே. ௨௨௬

கரப்பானெண்ணை.

சேதியென்றகரப்பானும் ரணத்துக்கெல்லாம் தெளிவானயெ ண்ணெயென்றுசொல்லக்கேளு, சாதியென்றபூவரசு செங்கத்தாரி தளம்பூதகரப்பனுடு கண்டங்காலி, வேதியென்றநிலவாகை வகை யொன்றுக்குவிதமாகப்பலம்பத்து நறுக்கிக்கொண்டு, ஆதியென்ற தூணிநீ எட்டொன்றுக்கியப்பனேயாமணக்கெண்ணெய்படிஒன்றே

ஒன்றப்பாவெள்ளாட்டின்பால்தானென்று உத்தமனேமிளகு கருஞ்சீரகந்தான், வின்றப்பாகார்கோலம்வெள்ளுள்ளி வசம்புவே ருனசதகுப்பைவலம்புரிக்காய், நன்றப்பாபாக்கிபட பட்டைதானு ம்நலமாகவகையொன்று கழஞ்சிரண்டு, தன்றப்பாமுன்பாலாலரை த்துக்கொண்டுதளமான வெண்ணெயிலே கரைத்துவிட்டே. ௨௨௮

விட்டப்பாலடுப்பேற்றி மெழுகுபதமானால் வெருளாதே கா ண்டிநிறைகொடுத்தாயானால், கட்டப்பாசகலகறப் பானும்போகும் தளமானவரிப்பெல்லாஞ் சாராதோடுங், கட்டப்பாரணத்தின்மேல் தடவிபோடக் கச்சாமலுதிர்ந்துபோங் கருவாய்க்கேளு பட்டப்பா பத்தியந்தான் காத்தாயானால்பறக்குமடாகறப்பனோடிரணந்தானே.

மாந்தயெண்ணெய்.

தானென்றமாந்தெண்ணெய்சொல்லக்கேளுதயவான வாமண க்கெண்ணெய்படியொன்று, வானென்றவெள்ளிரண்டு வாசின்ப ட்டைவளமான வறுகுமஞ்சள்வெள்ளைப்பூண்டு, காணென்றவெவ் வேறேநிம்பக்காய்மட்டும் கருவாகவரைத்தெண்ணெய் தனிற்கரை த்து, நானென்றபேய்த்துமமட்டிக்காயப்பா நலமாகப்பாதியதில்ந றுக்கிப்போடே. ௨௩0

ம்பாட்டப்பாவடுப்பேற்றிக்காய்ச்சிவந்தால் பொட்டெனவே யிறக்கியதைநிறுத்துக்கொண்டு, நாட்டப்பாமூன்றுநாள் கால்சேர்வீதம் நலமாகக்காலமேகொடுத்தாயானால், காட்டப்பாமாந்தமெல்லாங் காணுமோடுங் கருவானயிசுவுமுதல்கண்டிப்பாகும், நீட்டப்பாபெயர் மந்தம்பொருமமெல்லாம் நிலைகெட்டேயோடுமோமின்னங்கேளே. ௨௩௧

மேகத்தெண்ணெய்.

கேளப்பாமேகமென்ற தெல்லாந்தீரக் கெடிதான வெண்ணெயொன்றுசொல்லக்கேளு, நாளப்பாகோவைச்சாறு காணிச்சாறுகலமானவல்லாரை செருப்படையின்சாறு, வேளப்பாயானையிட தண்டுச்சாறு வேளப்பாயானையிட நெருஞ்சிச்சாறு வெகு சுறுக்காஞ்சிந்தியிடதண்டுச்சாறு, ஆமப்பாவரசனிட பட்டைச்சாறு அப்பனே வகைக்குப்படி யரையதாமே. ௨௩௨

ஆமப்பாவாமணக்கி னெண்ணெய்படிமுக்கால் சாமப்பா சாற்றிலே விட்டுக்கேளு, சதுரானசாதிக்காய் சாதிபத்திரி வாமப்பாமாசிக்காய் கற்கடகச்சிங்கி, வளமானசண்பகப்பூ காட்டாத்திப்பூ வேமப்பா சிறுநாகமேலங் குரோசானி வெகுசுறுக்காய் கழஞ்சிரெண்டெடைதான் தூக்கே. ௨௩௩

தூக்கியேயாவின்பால் விட்டேயாடிச் சுறுக்காக வெண்ணெயிலே கரைத்துவிட்டுத், தாக்கியேசித்தி மூலி வேரின்பட்டை சாதகமாம்பலமொன்று கூடப்போட்டுத், தேக்கியே யடுப்பற்றிமெழுகுபதம்பார்த்துத் திறமாக வடித்ததனைக் கலசத்துள்வே, ஆக்கியே கற்கண்டு பலம்ரண்டிட்டு அப்பனே கரண்டிநிறை கொள்ளு கொள்ளே. ௨௩௪

கொள்ளப்பா மண்டலந்தான் கொண்டாயானால் கூறுகெட்டமேகமெல்லாங் குளிர்ந்துபோகும், தள்ளப்பா கிரணகிந்தி லிங்கப்புற்று தள்ளுமே யாணிப்புற்றகிரந்தி, நல்லப்பாவெடிசிலை மேகவூறல் நலமானசொரிசிரங்கு நாடாதோடுந், தள்ளப்பாசீழிரத்தம் பிரமியங்கள் தவருண்டோபோகுமடா சார்ந்துபாரே. ௨௩௫

விழுதியெண்ணெய்.

பாரப்பாகெர்ப்பரோ யெல்லாந்தீரப் பகருகிறேன் விழுதியெண்ணெய் பண்பாய்க்கேளு சோப்பாமுத்தெண்ணெய் படிதானென்று திறமானவாவினெய் படிதானென்று, தாரப்பா விழுதிச்சாறு படிதானென்று தளமானதிரிகடுகு வசம்பீருள்ளி, ஆரப்பாகோஷ்டமொடு லவங்கமேலம் அப்பனே வெள்ளுள்ளி காலதாமே. ௨௩௬

ஆமப்பாவாவின்பாலாலவரைத்து அப்பனேநெய் தனிலேகரைத்துவிட்டுப், போமப்பாவடுப்பேற்றி மெழுகுபதம் பார்த்துப்போட்டெனவே யிறுத்தொரு கலசத்துள்ளே, நாமப்பாமூன்றுநாள் கால் சேர்வீதம் நலமாகக் கொண்டுவர வாறுநாள் தான், வேமப்பா பத்தியந்தா னுப்பைத்தள்ளு வெகுசுறுக்காய்த் தீருமடா கெர்ப்பவாய்வே. ௨௩௭

கெர்ப்பத்தின் வாய்வெல்லாங் கெதிகொட்டோடும் கிட்டாதுசூதகத்தின் வதியெல்லாம்போம், கற்பகத்தில் புழுக்களெல்லாம் நழுவிவிழும் காணுதுசூலையெல்லாங் கண்டிப்பாரும், கற்பத்திலிசுவுமுதல் தளர்ந்துபோகும் சந்திப்பில் சூலையெல்லாஞ் சாந்தமாகும் அற்பமது வல்லவடா கெர்ப்ப முண்டாம் ஆச்சரிய மின்னமொன்றறைகிறேனே. ௨௩௮

அறைகிறே நல்லெண்ணெய்ப் படிதானென்று அறைகிறேன் மூலவேர் பலந்தான்ரண்டு, முனையாகவாவின்பால் விட்டேபாட்டி நிறைகிறேன் கரைத்துவிட் டடுப்பிலேற்றி நினைவாக மெழுகுபதந் தனில்வடித்து, குறைகிறேன் காண்டைநிறை கொண்டாயானல் கொடிதான மேகமெல்லாங் கூறிப்போமே. ௨௩௯

கூறிப்போங் குறியெரிப்பு லவங்கப்புற்று கொடிதான கிரந்தியெல்லாங் குடிபோமப்பா, நாடிப்போமுள்ளழலை வாய் நாற்றங்கள் நாடாதே யெரிப்பெல்லா நளினமாகும், தேறிப்போஞ் சேதிமுதல் வெடிரணங்கள் தீராதகுட்டமெல்லாந் தீர்ந்துபோகும், நாறிப்போங் கெந்தியிட்டுக் கொண்டாயானல் நலமுடன் கடல்புகும் ரணங்கள் குன்மந்தானே. ௨௪௰

* கலிங்காதி எண்ணெய்.

குன்மவகைதீருதற்கு கலிங்காதியெண்ணெய் குணமாகச்சொல்லுகிறேன் புலத்தியனேகேள், கனமென்றதும் மட்டிக்காய்ச் சாரப்பா கருவாகபடியிரண் டாவிநீர்தான், தன்மமென்றபடி யிரண்டு வெள்ளாட்டு நீர்தான் தப்பாமல்படியொன்று கூடச்சேர்த்து, பன்மமென்ற வாமணக்கி னெண்ணெயப்பா பகராதே படியிரண்டு கூடவாரே. ௨௪௧

வார்த்தப்பா கடுக்காயுங் கடுகுரோணி வளமானவாய் விளங்கந் திரிகடுகுமேலம், எத்தப்பாவிந்துப்பு வளையலுப்பு இதமானகல்லுப்புச் சவுட்டிலுப்பு, காத்தப்பா நவாச்சார மெவாச்சாரங்காரங் கலங்காதே யப்பளாகாரங்கூட்டி, பார்த்தப்பா வால்மிளகு யானைதிப்பிலியும் பாங்கானவெள்ளுள்ளிப் பருப்புமாமே. ௨௪௨

* கலிங்கம் - தும்மட்டிக்காய்.

ஆமப்பாநிலவாகைகண்டங்கத்திரி அப்பனேவெள்ளைச்சாரணையின்மூலம், நாமப்பாசத்திச்சாரணைக்கிழங்குநலமாக வரைப்பலமாயரைத்துக்கொண்டு, தாமப்பாநொச்சிச்சாறு பசுமஞ்சள்சாறுந் தலமானவிஞ்சிச்சாறு குமரிச்சாறு, வேமப்பாபடியரையாய்க் கூடவிட்டு விருதானகடைசரக்குக்கழஞ்சுமூறே. ௨௪௩

மூன்றப்பாவரைத்தெண்ணெய்தனிற்கரைத்து முதிராமலடுப்பேற்றிமெழுகுபதமானல், ஏன்றப்பாகலசமதில்வடித்துவைத்தே என்சொல்வேனரைக்கால்சேர்வீதமாகக், கான்றப்பாகொண்டுவரப்பத்துநாள்தான் கவுசையொடுபீலிகையுங் கரைந்துபோகும், ஆன்றப்பா பெறுவயிறுவாய்வுகட்டி அணுகாதுமகோதரங்களற்றுப்போமே. ௨௪௪

அற்றுப்போம்வாயுவென்ற திரட்சியெல்லாம் அப்பனேகுணமாகுமெட்டுவாயு, நற்றுப்போங்கெர்ப்பவலிகெர்ப்பச்சூலை நாடாயிசுவுபுழுநழுவிவீழும், கற்றுப்போங்கைகாலில்கட்டுச் சூலைகடல்புக்குந்துவலிகாணுமோடும், பற்றுப்போம்வயிற்றிலுள்ள வியாதியெல்லாம்பறக்குமடாவின்னமொன்று பகரக்கேளே. ௨௪௫

வாதயெண்ணெய்.

கேளடாவேப்பெண்ணெய் புங்கனெண்ணெய் கெடியானவாமணக்கின்புன்னையெண்ணெய், நாளப்பாவெள்ளெண்ணெய் ஐந்துங்கூட்டிநலமாகவகையொன்றுபடியரைதான்சேர்த்துத், தாளப்பாவெள்ளுள்ளிவசம்புகாயம், தனமாகதிரிகடுகு வோமங்கிரும்பு, ஆளப்பாசதகுப்பைகடுகுரோணி அப்பனேசித்திரமூலமாமே. ௨௪௬

ஆமப்பாவகையொன்று பலமரைதான்வாங்கி அப்பனேகாடியாலரைத்துப்போட்டு, வேமப்பாசாடிபடிரண்டிலேதான் விருதாகக்காலதுவிட்டடுப்பிலேற்றிப், போமப்பாமெழுகுபதம் வடித்துக்கொண்டுபுகழாகக்கலசமதில் பதனம்பண்ணி, தாமப்பாமேற்பூசிப்பிடித்துக்காய்ச்சத்தவறிப்போம் வாதமென்பதுவுந்தானே. ௨௪௭

தானென்றமேகவகைசூலையெல்லாந் தளமானதிமிர்வாதம்புறவிசுவுமுதலா, நானென்றவிசுவுமுதல்நடுக்குவாதம் நாடாதுசிறுகடுப்புநளினமாகும், தேனென்றகாசெடைதானுள்ளேதாக்கி தேகத்தின்வாதமெல்லாந்தெறிபட்டுப்போகும், வானென்றதேகவலியெல்லாந்தீரும் வளமாகுந்துவாலையிட வாதம்போமே. ௨௪௮

சுகசீதபேதி யெண்ணெய்.

போமப்பா சுகபேதியெண்ணெயொன்று புகலுகிறேன் முத்தெண்ணெய் படிதானென்று, காமப்பாகுமரிச்சார் படிதானென்

றுசுருவான பிரமிச்சாறுபடியரைதானுகும், தாமப்பாமிளகுகளி பாக்குகடுக்காய்தவறுமல்கருவேலிபலமிரண்டப்பா, நாமப்பாப்பத க்குநீர்தன்னிற்போட்டு நலமாகவெட்டொன்றுய்வடித்துவாங்கே.

வாங்கியேயெண்ணெய்தனக்குள்ளேயப்பா வளமாகக்கடுக்கா யுங்கடுகுரோணி, தாங்கியேமிளகுடனேயுள்ளிவகைவொன்று தவ றுமல்பலமறைதானரைத்துப்போட்டு, ஏங்கியேவடுப்பேற்றி மெழு குபதமானுல்என்னசொல்வேன்கலசத்துள்வடித்துவைத்து, ஆங்கி யேகால்சேர்தான்கொடுத்தாயானுல் அப்பனே சுகசீதபேதியாமே.

ஆமப்பாநீர்கட்டுவாய்வுஊதல் அப்பனேவாய்வெல்லாமகன்று போகும், தாமப்பாசரீரமெல்லாம்குளிர்ச்சிபாகும்தளருதவயிறுவிம் மல்தளர்குபோகும், நாமப்பாமூலத்தின்சூடெல்லாம்போம்நாடா துபித்தமெல்லாங்கிழேசாடும், போமப்பாவிதனைப்போல் பேதியெ ண்ணெய்பூதலத்தில்சுகபேதி யில்லைதானே. ௨௹க

பழத்தெண்ணெய்.

தானென்ற பழத்தெண்ணெய்சொல்லக்கேளு தவறுமல்பழச் சாறுபடிதானென்று, நானென்றமுத்தெண்ணெய் படிதானென்று நலமானகுமரிச்சாறுபடிதானென்று, வேனென்ற கடுக்காய்தான்ப லமிரண்டுவிருதாகவரைத்தெண்ணெய் தன்னிற்போட்டுக்கானென் றவடுப்பேற்றிமெழுகுபதமானுல் கண்டப்பா வடிகொண்டுகலசம் வாரே. ௨௹௨

வார்த்தப்பாகால்சேர்தான்கொடுத்தாயானுல் வாங்குமடாபித் தமென்றநாற்பதும்போம், ஏத்தப்பாவெரிவுமுதல்காந்திதீரும்என் னசொல்வேனுஷ்ணநோயெல்லாந்தீரும், காத்தப்பாபட்சமொன்று கொடுத்தாயானுல் கருவானநோயெல்லாங்காணுதோடும், பார்த்த ப்பாவயிற்றிலுள்ளவியாதியெல்லாம் பறக்குமடாபித்தநோய்பாரும் பாரே. ௨௹௩

வீரபத்திரக்கலிக்கம்.

பாரப்பாவீரபத்திரக்கலிக்கங்கேளுபறக்குமடா பசாசுமுதல் சன்னியெல்லாம், சோப்பாதிரிகடுகுகடுக்காயிந்து திறமானவாள மொடுகிரும்போடேழும், வேரப்பாவெந்தயச்சாறதனுலாட்டி வெ குசுறுக்காய்கால்சாமமரைத்துக்கொண்டு, ஆமப்பாமுன்சாற்றிற்க லிக்கம்போடஅப்பனேசன்னிமுதல் தோஷம்போகும். ௨௹௪

ஆக்கிராணநசியம்.

போமப்பா வாக்கிராணஞ் சொல்லக்கேளு புகழானகண்டை வேர் தும்பைமூலம், காமப்பாயிலுப்பைப் பிண்ணுக்குசுட்டு நலமா

க முன்னிரண்டும் ரவியுலர்த்தி, சேமப்பா பொடிசெய்து வடிகட்டிக் கொண்டேதான் திறமான் குழலடைக்காக கிராணஞ்செய்யத், தாமப்பா தலையிலுள்ள தோஷமெல்லாம் சண்ணுண்டு போகுமடா வின்னங்கேளே. ௨௫௫

நசியம்.

கேளப்பா விலுப்பையிட பழம்பிண்ணாக்குக் கிரிகையாய்ப் பொடிசெய்து துணியிர்கட்டி, வாளப்பா வாலையிட வூசிநீரில் மைந்தனே நசியமிடச் சன்னிதோஷம், தாளப்பாபித்தத்தா லெடுத்த தோஷம் தளமான கபவாத தோஷமெல்லாம், ஆளப்பா பிரமராட்சுதன் முதலாய் ஆகாயபசாசுமுத லகன்றுபோமே. ௨௫௬

கண்டாவிழ்தம்.

போமப்பா கண்டாவிழ்தஞ் சொல்லக்கேளு புதுமையாந்தங்கமொடு வெள்ளிமுத்து, நாமப்பாமதுரமொடு கிராம்புதிப்பிலி நலமான பவளமொடு ருத்திராஷ்டம், தாமப்பா கோஷ்டமோ டக்கிராகாரம் தளமானகாமப்பூ கூவிளத்தின்மூலம், ஆமப்பா கலைக்கொம்புச் செந்தூரம் அப்பனே யாடாதோடை மூலந்தானே. ௨௫௭

தானென்றமூலைப்பாலாலரைத்துக்கொண்டு தப்பாமல் தேன்குத்தி நாவிற்போட, கானென்ற தோஷமொடு சன்னியெல்லாம் நாடாது நாவரட்சி நாவழுத்தல், கேனென்றஸ்திரீ சங்கோத தோஷம் வாந்தி திறமான விக்கல்முதல் தீரும்தீரும், வானென்றவாமெல்லாம் வாங்கிப்போகும் வளமான நாக்கின்முள்ளும் வாங்குந்தானே.

சூரணங்களின் சுத்தி.

தானென்றசூரணத்தின்சுத்திகேளு தப்பாதேசரக்கெல்லாஞ் சூரணித்து, நானென்றவாவின்பாலாற்பிசைந்து நலமானசட்டியிலேபாலைவிட்டு, வானென்றசுத்தசலம்பாதிவிட்டு வளமாகமேற்சீலை கோடுகட்டிப், பானென்றசூரணத்தைப்பிட்டுபோல்வைத்துப் பதறுதேவெந்தெடுக்கச்சித்தியாமே. ௨௫௯

ஆமப்பாரவியுலர்த்திப்பொடிதான்செய்து அப்பனே சமனாகச் சர்க்கரையைச்சேர்த்து, நாமப்பாகொண்டுவரத்தோஷம்போச்சு நன்றாகச்சுத்திசெய்யாச்சூரணந்தான், தாமப்பாரோகத்தைவெல்லாதப்பா தளமானவியாதியெல்லாம்பாரிக்கும்பார், வேமப்பாசுத்திசெய்துகொண்டாயானால் வெகுசுறுக்காய்த்தீருமடாவியாதிகேளு.

செந்தூரவைப்புக் கரு.

கேளப்பாசெந்தூரப்பற்பமெல்லாங் கெடியானசிங்கமுப்பூ தொட்டலாகும், நாளப்பாவிதைவிட்டால்பற்பமில்லை நன்றானலோகமுதல்சிவப்பேறாது, வாளப்பாவிதுவல்லோபுடத்துக்காதி வகையறியாவைத்தியனல்லோமாடுமேய்ப்பான், தாளப்பாவைத்தியர்க்காய்க்கருவைச்சொன்னேன் தப்பாதுபற்பமுறைசெந்தூரந்தானே.

லோக செந்தூரம்.

தானென்றலோகசெந்தூரங்கேளு தயவானஅரப்பொடியில்கல்லெண்ணெவிட்டு, வானென்றநாழிகைதான் அறுபதானால் வளமாகவலுத்ததனைப்பீங்கானில்விட்டு, நானென்றபழச்சாறுபிழிந்துவிட்டு நலமாகக்கிண்டிவைத்துநாலாநாளில், தேனென்றேயுருஞ்சியதைக்கழுவிபோட்டுத் திறமாகரவியுலர்த்திப்பலந்தான்தூக்கே.

தூக்கியேசெந்தித்தகெந்திகேளு சுகமாகப்பலமொன்றுகூடப்போட்டு, தாக்கியேபழச்சாற்றால்சாமம்நாலு சரியில்லாப்பொற்றலையால்சாமம்நாலு, தேக்கியேயசைக்கையிலேமுப்பூவப்பா திறமாகக்கழஞ்சுநிறைசேர்த்துப்போட்டுத், திறமாகவாங்கியேசெய்தூவியிற்காய்ந்தால் வளமானமுப்பதெருப்புடத்திற்போடே.

போடப்பாமுக்காலும்பொற்கையானால் புகழாகநால்சாமமாட்டிக்கொண்டு, நாடப்பாபில்லைசெய்துரவியுலர்த்தி நலமாகமுன்போலேபுடத்தைப்போடு, ஆட்டப்பாவாறினபின்னெடுத்துப்பாரு அப்பனேமுருக்கம்பூப்போலாம்வர்ணம், நாடப்பாபணவெடைதானனுபானத்தில் நலமாகத்தேன்கூட்டிக்கொள்ளுகொள்ளே.

கொள்ளவேபாண்டுவகையெல்லாந்தீரும் குறியானபித்தவெட்டைபித்தவாய்வு, நள்ளவேவாய்வென்றதெல்லாந்தீரும் நாடாதேயரோசியங்களன்னத்தோஷம், விள்ளவேமயக்கமொடுவாந்திதீரும் விருதானபித்தமெல்லாம்விழலாய்ப்போகும், தள்ளவேயிஞ்சியென்றசூரணத்தில் சாப்பிடவேதேன்கூட்டிச்சாறும்வாரே. ௨௫௫

அயக்காந்தச்செந்தூரம்.

பாரப்பாகாந்தத்தையிப்படியேசெய்யில் பரிவானகாந்தமொடுசிவப்புமெத்த, சாரப்பாவனுபானமறிந்துகொண்டால் தப்பானமூலவகையாவுந்தீரும், தேரப்பாபித்தமெல்லாஞ் சிதறிப்போகும் தேகத்தில்பாண்டுவெல்லாந்தீருந்தீரும், ஆமப்பாதேனிலேகொண்டாயானால் அருணனைப்போல்காந்தியாமறிந்துகொள்ளே. ௨௫௬

கொள்ளவே அயக்காந்தச் செந்தூரங்கேள் குறிப்பானரண்டையுந்தான் சுத்திசெய்து, கள்ளவேசமனுகரண்டையுந்தான்கூட்டி தள்ளவேவெண்காரங் கால்தான்கூட்டித், தயவானரசங்கால்தான் கெந்திசமனப்பா, விள்ளவே சுத்திசெய்து கல்வத்திட்டு விருதானபழச்சாற்றூற் சாமம்நாலே. உசுஎ

நாலாகமுப்பூவுங் கழஞ்சிரண்டு நலமான பொற்றலையால் சாமம்நாலு, காலாகவரைத்துபில்லை ரவியிற்காய்ந்தால் கருவானவோட்டில்வைத் தோடுமூடிச், சாலாகமுப்பதெருப் புடத்திற்போடு தப்பாது செந்தூரமருணன்போலாம், மாலாகபணவிடைதா னனுபானத்தில் மைந்தனே கொண்டுவரப்போம் நோய்கேளே. உசுஅ

கேளப்பாபாண்டாறுங் கிருணியாதும்கிருபையாய் பித்தமது நாற்பதுபோம், நாளப்பா வாய்போட்டு வாதமெல்லாம் நாடாதேயக்கினியா மந்தங்கேளு, சூளப்பா தாதுவெல்லா முறுக்கத்தேறும்சுகமாகவெளுத்தசடமவண்டுபோலாம், ஆளப்பா யிரைத்தேனிற்கொண்டாயானால் அணுகாத பாண்டுவென்ற ரோகம்போமே. உசுகூ

போமப்பா சூலையொடு வாயுவெல்லாம் பொல்லாத கெர்ப்பநோய் சொல்லாதோடும், நாமப்பா வாந்தியொடு பொருமல்விம்மல் நாடாத வுஷ்ணமாம் வாய்வுதீரும், தாமப்பா சேத்துமங்களெல்லாந்தீரும் தலைமயக்கம்வாயூறல் சாந்தமாகும், வேமப்பா பத்தியங்கார் பித்துமெல்லாம் வெகுசுறுக்கால்தீருமடா வின்னங்கேளே. உஎ0

திரிலோகசெந்தூரம்.

கேளப்பாதிரிலோகச் செந்தூரந்தான் கெடியான லோகமோடப்பி ரேகங்காந்தல், நாளப்பா மூன்றையுந்தான் சுத்திசெய்து நலமாகச் சமன்கூட்டிக் கல்வத்திட்டுத், தாளப்பா சுத்தித்த கெந்தி சமன் கூடத்தப்பாமல் வாலைரசம்பாதி சேர்த்து, ஆளப்பா பழச்சாற்றூற் சாமம்நாலு அப்பனேயரைக்கையிலே பூநீறுபோடே. ()

போடப்பா முக்கழஞ்சு தூக்கியேதான் பொற்றலையால் நாற்சாம மரைத்துக்கொண்டு, நாடப்பா செருப்படையால் சாமம்நாலு நன்றான குமரிச்சாறு சாமம்நாலு, தேடப்பா பில்லைசெய்து ரவியிற்போடு திறமாகவோட்டில்வைத்தோடுமூடி, ஆடப்பாசீலைசெய்து புடத்தைப்போடு ஆறியபின்னே யெடுத்து தரைக்கக்கேள். உஎஉ

கேளப்பா லிங்கமரைப் பலந்தான்கூட்டிக் கெடியான குமரிச் சாறு சாமமெட்டு, காளப்பா வரைத்துபில்லை ரவியிற்காய்ந்தால் ந ன்றாக முப்பதெருப் புடத்தைப்போடு, வேளப்பா செந்தூர மரு ணன் போலாம் வெகுசுறுக்காய்ச் சஞ்சீவி சூரணத்தில், தாளப்பா பணவிடைதா னெய்யிற்கொள்ளத் தப்பாதுமேகநீர் தவறிப்போ மே. உ௭௩

தவறிப்போம் பாண்டுவகை யெல்லாந்தீரும் தப்பாது பித்த மென்ற நாற்பதுப்போம், தவறிப்போ மேகமென்ற விருபத்தொன் றும் சாந்தமாம் வாய்வெல்லா மொழிந்துபோகும், தவறிப்போ மு ட்சூடு மிருமலெல்லாஞ் சந்திரன்போல் தேகமெல்லாங் குளிர்ச்சி யாகும், தவறிப்போம் பித்தத்தின் கோபமெல்லாம் சண்ணுமடா வின்னமொன்று சாற்றக்கேளே. உ௭௪

பஞ்சலோகச்செந்தூரம்.

கேளடாபஞ்சலோகச்செந்தூரந்தான் கெடியான தங்கமொ டு வெள்ளிசெம்பு, நாளடா காந்தமோடி ருப்பில்வைத்து நலமாகச் சுத்திசெய்து சமனாய்க்கூட்டி, வேளடாகெந்தகந்தான் ரட்டிப்பிட் டு வெகுவான சூதமரை வீரங்கால்தான், ஆளடாமுப்பூவின் சுண் ணமொன்று அப்பனேபழச்சாற்றால் சாமம்நாலே. உ௭௫

நாற்சாம மரைத்துமேயுலரவைத்து நன்றாகவோட்டிவிட்டோ டுமூடிச், சீலானசீலைசெய்துமுழப்படத்தின் சென்றேதானாறினபி ன்னெடுத்துக்கொண்டு, காலான்கரிசலைச்சாற்றிலாட்டிக் கசகாமல் நாற்சாமமரைத்துககொண்டு, வேலானமுழப்புடத்திற்செந்தூரமா கும் விதமாகச்செருப்படைநாற்சாமமாட்டே. உ௭௬

ஆட்டியேமுழப்புடத்திற்செந்தூரந்தான் அருணனைப்போனி றமாகுமெடுத்துக்கொண்டு, மூட்டியேதிரிகடுகிற்பணந்தான்கொள் ள மூகண்டதேன்கூட்டிமண்டலந்தான், நாட்டியேவாயுவென்றதெ ண்பதும்போம் நாடாதுபித்தத்தின்மூலந்தீரும், காட்டியேசேத்து மங்களிருபதும்போம் கருவாகவின்னமொருசுருதிகேளே. உ௭௭

மண்டூரச்செந்தூரம்.

கேளடாவாயிரந்தான்வருஷஞ்சென்ற கெடியானசிட்டமது கொண்டுவந்து, தாளடாவாவினீர்தன்னிலேதான் தளமாகக்காய்ச் சியேதோய்ச்சுத்தோய்ச்சு, வேளடாபத்துவிசைதோய்ச்செடுத்து விருதானகல்வத்திற்பொடியாய்ச்செய்து, நாளடாபத்திலொன்று கெந்திசூதம் நலமானலிங்கமுப்புவெண்காரங்கூட்டே. உ௭௮

கூட்டியேபழச்சாற்றில்புடந்தான்பத்து கூசாதேகரிச்சாலைப் புடந்தான்பத்து, ஆட்டியேசெருப்படையின்புடந்தான்பத்து அப் பனேசெம்பைச்சாறுபுடந்தான்பத்து, நீட்டியேயரசனிடபட்டை ச்சாற்றில் நேராகப்புடமஞ்சுபோட்டெடுத்து, நாட்டியேசெந்தூர ம்பொடிதான்செய்து நலமானபரணிதனிலடைத்துக்கொள்ளே.

கொள்ளவேதிரிகடுகுதேனிலேதான் கூசாதேபணம்ரண்டுகூட் டிக்கொள்ளே, விள்ளவேவிப்பாண்டுகாமாலையாறும் விறுதானபா ண்டுவகைகுடிபோமப்பா, தள்ளவேபித்தமெல்லாங்கீழேசாடும் த ளமானசேத்துமநோய்தொண்ணூற்றுறும், கள்ளவேகடல்புக்கிக் காணுதோடும் கண்டாயோவெண்பாண்டங்கரும்பாண்டமாமே.

ஆமப்பாவரோசிகங்களன்னத்தோஷம் அகலாதவாந்திவிக்கல் அகன்றுபோகும், தாமப்பாவாயுவென்றதெல்லாம்போகும் தளமா னநீர்த்தோஷநாடாதோடும், காமப்பாலூறமடாதேகமின்னும் கல கலெனத்தேகமுழுதிறுகிப்போகும், நாமப்பாகண்டபடிசொன்னே மின்னம் நலமானவப்பிரேகவகைசொல்வேனே. உஅக

அப்பிரேகச்செந்தூரம்.

சொல்லக்கேள்கிருஷ்ணவப்பிரேகம்வாங்கி சுறுக்காகக்காய்ச் சியேபாலிற்போட்டு, வல்லக்கேள்கழுவியதையெடுத்துக்கொண்டு வாகானநெல்லோடப்பிரேகங்கூட்டி, நல்லக்கேள்காடியிலேபிசைந் தாயானல் நலமானவப்பிரேகமிறங்கும்பாரு, வெள்ளக்கேள்மறுநா ள்தான்தெளிவிறுத்து விருதானவப்பிரேகம்ரவியிற்போடே.

போட்டப்பாவுலர்ந்தபின்னெடுத்துக்கொண்டு புகழானகல்வ த்திற்போட்டுநீயும், ஆட்டப்பாபழச்சாற்றாலநாலுசாகம் அப்பனே பத்திலொன்றுகெந்திகூட்டி, நாட்டப்பாபில்லைதட்டிரவிரண்டேதா ன் நலமாகமுப்பதெருப்புடத்திற்போட்டு, நீட்டப்பாகெந்தியிட்டு பழச்சாற்றாலே நேராகநாற்சாமமரைத்துக்காட்டே. உஅரு

காட்டியேரவிதனிலேகாய்ந்தபின்பு கனமானவோட்டிலிட்டுப் புடத்தைப்போடு, ஆட்டியேகல்வத்திற்போட்டுநீயும் அப்பனேகெ ந்தியிட்டுப்பழச்சாறுட்டி, ஆட்டியேபத்துவிசைப்புடத்தைப்போ டு அழகாகபின்பெடுத்துகரிசாலைச்சாற்றில், வாட்டியேபுடம்பத்து ப்போட்டெடுத்து வாகானசாறுசெருப்படைவிட்டாட்டே.

ஆட்டியேயிருசாமமுறவைத்து அப்பனேபுடம்பத்துபோட் டெடுத்து, நீட்டியேபொடுதலைச்சாறுபுடந்தான்பத்துநேரானபொ

ற்றலையிற்புடக்தானஞ்சு, நாட்டியேசிறுசெருப்படையிலேச்சாற்றுற் நசகாமற்புடமஞ்சுபோட்டெடுத்து, மாட்டியேமுருங்கப்பூச்சாற்று லாட்டி மைந்தனேபுடமைந்துபோட்டுக்கொள்ளே. ௧அ௫

கொள்ளப்பாசெந்தூரமருணன்போலாம் கொடிதானவனுபா னமறிந்துகொள்ளு, விள்ளப்பாபயமெட்டுமீளையிருமல் விருதான சேத்துமநோய்தொண்ணூற்றுறும், கள்ளப்பாபறந்தோடுங்கடலே புக்கும் கருவானசஞ்சீவிசூரணத்தில், அள்ளப்பாபணவிடைதான் தேனிற்கொள்ள அற்றுப்போமநீரிழிவுமகன்றுபோமே. ௨அ௬

போமப்பாதேகத்துள்மாந்தையெல்லாம் போகுமடாபிரமிய கோயிருமலெல்லாம், சாமப்பாவுட்சூடுள்ளெரிவுதானும் தளமான தேகமெல்லாம்குளிர்ச்சியாகும், வேமப்பாவித்தூறும்புஷ்டியாகும் வெகுநாளையெனும்புருக்கிவிழலாய்ப்போகும், காமப்பாகண்குளிரு ந்தேகமின்னும் கனமானபற்பவகைசொல்லக்கேளே. ௨அ௭

துருசுகுரு.

சொல்லக்கேள்புலத்தியனேபற்பத்துக்கு சுறுக்கானகுருவொ ன்றுசூட்டக்கேளு, வல்லக்கேள்துருசுசுத்திபண்ணிக்கொண்டு வ கையாகமுப்புநீர்மூன்றுநாள்தான், அல்லக்கேள்சாரநீர்மூன்றுகா ள்தான்அழகாகரவியுலர்த்திப்பலந்தான்தூக்கு,வல்லக்கேள்வங்கத் தைகடுஞ்சுண்ணமூதி வாகாகவெடைக்கெடைதான்கவசம்போடே.

இரசபற்பம்.

போடப்பாரவியிலேயேழுநாள்தான் புகழாகக்காய்ந்தபின்பு சுண்ணச்சீலை, நாடப்பாமூன்றுசந்திகாயவைத்து நலமானகாடை யிலேஅருவுமாகும், பாடப்பாசிமிழுக்குள்பதனம்பண்ணி பறக்கிர தோர்சூதத்தில்பத்திலொன்று, நீடப்பாவாய்பூரால்ரைத்துப்பில்லை நிசமாகரவியுலர்த்தியோட்டில்வையே. ௨அ௯

வையப்பாமேற்கீழுங்கல்லுச்சுண்ணம் வகையாகநடுவில்வில்லை வைத்துமூட்டி, செய்யப்பாசீலையதுமூன்றுசெய்து திரமாகக்குடத் திற்பற்பமாகும், மெய்யப்பாரசபற்பம்பரணிதனிலடைத்து விரு தானநெய்தேனிற்பணந்தான்கொள்ள, நையப்பாகாலோடுமுடக்கு ச்சூலை கண்காணுதோடுமடாவின்னங்கேளே. ௨௯௰

கேளடாசர்வாங்கவாதந்தீரும் கெடியானகுன்மமேநாயெட்டுக் தீரும், பாரடாவிசிவுமுதல்பறந்தேபோகும் பறக்குமடாசந்நிஎன்ற பதின்மூன்றுந்தான், கேளடாசூத்திபமேதார்கபாலசூலை தெரிகெட்

டேயோடுமோசிரநோயெல்லாம், வாளடாதேகமதுவலுத்துப் போ
கும்மகத்தானகெர்ப்பநோய்மாறுந்தானே. ௨௯௧

தாளகபற்பம்.

மாறுமடாவின்னமொன்றுசொல்லக்கேளு வகையானதாளகந்
தான்சுத்திசெய்துவீறுதடாரசபற்பந்துருசுநீரும் விராதவாய்நீரா
லரைத்துக்கொண்டு சாறுமடாசமந்தானுந்தாளகத்திலப்பிச்சதுரா
காவியுலர்த்திச் சுண்ணச்சீலை, சீறுமடாமூன்றுசெய்துசுண்ணத்தில்
வைத்துச்சிறப்பாகக்குக்கிடத்தில் சிவன்போலாமே. ௨௯௨

ஆமப்பாமால்தேவிபற்பந்தன்னை அளவிலொரு பணந்தூக்கித்
தேனிற்கொள்ள போமப்பாக்ஷயமெட்டுமிளைப்போடீளை விருதான
சிலோஷ்மநோயெல்லாந்தீரும், சாமப்பா பிரமியநோய்சாராதோடும்
சடலத்தில்கெர்ப்பநோய்சட்டென்றோடும், காமப்பாவெலும்புருக்கி
யஸ்திரணங்கள் கண்காணாதோடுமடாவின்னங்கேளு. ௨௯௩

வங்கபற்பம்.

கேளடாவங்கத்தைசுத்திபண்ணிக் கெடியாகலேசாகத்தகடுத
ட்டித், தாளடாதாளகமும்ரசமுங்கூட்டிச் சமனாகவாய்நீராலரைத்
துக்கொண்டு, வாளடாவங்கமென்றகட்டிதன்னை வளமாகப்பூசி
யேசமனாய்நீயும், ஆளடாவிமுகத்திலுலாப்போட்டு அப்பனேசுண்
ணம்புச்சீலைசுற்றே. ௨௯௪

சுற்றியேசுண்ணம்புக்குள்ளேவைத்துச் சுகமாகமுழப்புடத்தி
ல்நீறிப்போகும், மத்தியேவங்கமென்றபற்பந்தன்னை வரிசையாய்த்
திரிபலாதிசூரணத்தில், குத்தியேபணவிடைதான் தேனிலப்பாகொ
ண்டுவரபத்துநாள்தீரும்நோய்கேள், வற்றியோமியங்கள் பிரமேகங்
கள்வளருகின்ற வெலும்புருக்கிமாண்டுபோமே. ௨௯௫

மாண்டுபோங்கிரந்தியிது நூற்றுப்பத்தும் வறட்சியொடுசொ
றிசிரங்குமாண்டுபோகும், மாண்டுபோம்மேலூறல்படர்ந்த ஊறல்வ
கையான சிலவிடங்கள்மாறிப்போகும், மாண்டுபோம்பெரும்பாடு
வயிற்றிற்குத்தல்மகத்தானபுகைச்சல்விழி மாறிப்போகும், மாண்டு
போமேகமென்றகுலையெல்லாம் வகையானநாகத்தின் பற்பங்கேளு.

நாகபற்பம்.

கேளப்பாநாகத்தைச்சுத்திபண்ணிக் கெடியாகலேசாகப் பில்
லைதட்டித், தாளப்பா தாளகமும்வங்கபற்பம்சமனாகநாகத்துக்கிடை
யேதூக்கி, வாளப்பாநீராலடைத்துக்கொண்டு வளமாகச்சீலைமேல்

பூசிக்காய்ச்சித், தாளப்பாசுண்ணாம்புச்சிலைசுற்றிச் சுத்தமாஞ்சுண்ணாம்புக்குள்வையே. ௨௬௭

வைத்தப்பாமுழுபுடத்தில்சீறிப்போகும் *வாசுகிதாநீறியபின் சொல்லக்கேளு, வைத்தப்பாதிரிகடுகுதாளிசப்பத்திரி கருவானலவங்கமைந்துஞ்சமனாய்க்கூட்டிப், பைத்தப்பாரவியில்வைத்துச் சூரணித்தப்பதரூதேவடிசொண்டு வைத்துகொண்டே, சுத்தப்பாபணவெடைதான்தேனிற்கொள்ள எழுந்ததொருசிலேத்துமநோய்தொண்ணூற்றாறே. ௨௬௮

ஆறுனசோகமெல்லா மற்றுப்போகும் அப்பனேவாதமென்றதெண்பதும்போம், வீறுனபித்தமதுநாற்பதும்போம் வெறுசுக்காய்மேகமொடுசூலைதீரும், நாறுனகுட்டமென்றதெட்டுந்தீரும் நலமானகடிவிஷங்கள்சாராதோடும், கூறுனகுறியெரிப்புப் பத்துந்தீரும் குன்மமென்றசூலைமுதல்குடிபோம்பாரே. ௨௬௯

தாம்பிரபற்பம்.

பாரப்பாதாம்பிரபற்பம் பழச்சாறுதன்னில் பதருதேபதினைந்துதரமேசாய்த்து, நேரப்பாலேசாகத்தகடுகட்டி நினைவாக நாகமுந்தாளகமுங்கூட்டிச், சாரப்பாவாய்நீரா லரைத்துக்கொண்டு சமனாகத்தாம்பிரந்தனக்குப்பூசி, ஆரப்பாரவியுலர்த்திச் சுண்ணச்சிலைஅப்பனேசுற்றியேசுண்ணத்தில்வையே. ௨௭௦

வைத்தப்பாகனபுடமாய்போட்டெடுக்க வாகானதாம்பிரபற்பமாகும், கைத்தப்பாபோகாதுவெகுசுறுக்காய் காணடாவனுபானமறிந்துபோடு, குத்தப்பாகுன்மமெட்டுஞ்சூலைபதினெட்டுங் குடிபோகுந்திரிகடுகுதேனிற்கொள்ளச், சித்தப்பாயீளையோடிருமலெல்லாஞ் சிதறிப்போம்வெள்ளியிடபற்பங்கேளே. ௨௭௧

வெள்ளி பற்பம்.

கேளப்பாவெள்ளியதுதகடுதட்டிக் கெடியானரசபஸ்பம்வங்கபற்பம், நாளப்பாதேகமொடுமூன்றுநேராய் நலமாகவாய்நீராலரைத்துக்கொண்டு, கேளப்பாவெள்ளிக்குச்சமனாய்ப்போடு விருதானரவியுலர்த்திச்சிலைசெய்து, சூளப்பாசுண்ணாம்புக்குள்ளேவைத்துத் துடியாகமுழப்புடத்தில்தூங்கிவாங்கே. ௨௭௨

வாங்கியதோர்பற்பமதைப்பதனம்பண்ணு வகையாகப்பணவெடைதான்தேனிற்கொள்ளத், தேங்கியதோர்கல்லடைப்புச்சதையடைப்புத் தீராததிரிச்சுணங்கள்தீருநதீரும், ஏங்கியதோர்காசமோடிளைப்புந்தீரு மிளைக்குமேலிங்கப்புற்றுயோனிப்புற்று, பாங்கியேகிரந்தியரிமேகமெல்லாம்பரக்குமடாவின்னமொருபற்பங்கேளே

* வாசுகி-நாகம்.

தங்கபற்பம்.

கேளப்பாதங்கமொருபலந்தான்வாங்கிக்கிருபையாய்த்தகடுதட்டிச்சொல்லக்கேளு, நாளப்பாபழச்சாற்றில்பூங்காவியாற்றி நலமாகத்தகட்டின்மேற்பூசிக்காய்ச்சி, தாளப்பாவைந்துதரங்காய்ச்சிகொண்டு தளமாகவங்கபற்பம்நாகபற்பம், கேளப்பாரசபஸ்பம்வீரம்வெள்ளை சேர்சமனையண்டத்திநீராலாட்டே. நாச

ஆட்டியேசமனகதகட்டிற்பூசி அப்பனேயண்டத்தில்சுண்ணம்வைத்து, நீட்டியேமேல்மூடிசீலைசெய்து நேராகமுழப்புடத்தில்நீவிப்போகும், காட்டியேகறுத்தாக்கால்வீரங்கால்கூட்டிக் கனமானவண்டநீர்தன்னலாட்டிச், சாட்டியோவியுலர்த்தியோட்டில்வைத்துச் சாங்கமாய்முழப்புடத்தில்தாக்கிவாங்கே. நாரு

வாங்கியேயெடுத்துபார்வெண்ணீராகும் வளமானதேநெய்சர்க்கரையிற்கொள்ளச், சாங்கியேசந்நியென்றமூலமெல்லாம் தப்பாதுதோஷமென்றவேழுந்தீரும், நீங்கியேவலிப்பிசுவும்பறந்துபோகும் நினைவுகெட்டசேதனமகோய்தொண்ணூற்றாறும், தேங்கியேவாதநோயொன்பதுந்தான் சிதறிப்போம்பித்தமதுவொழிந்துபோமே.

ஒழிந்துபோம்பித்தவெட்டைகிராணிபெரும்பாடு ஒழியாதபிரமியநோயொடுங்கிப்போகும், ஒழிந்துபோம்குன்மமெட்டுபாண்டோராறும் உத்தமனேமேகாலக்கழிச்சல்தீரும், ஒழிந்துபோம்சூலைமுதலிசுவுரோகம் ஓகோகோகுட்டமெட்டும்கடலேபுக்கும், ஒழிந்துபோம்கிரந்தியொடுவெடிமேகந்தான் உட்சுரங்கள்நீர்சுறுக்குமோடும்பாரே. நாள

வெண்காரஞ் சலாசத்து கலைக்கொம்பு கல்நார்பற்பம்.

பாரப்பாவெண்காரஞ்சிலாசத்துதான் பாங்கானகலைக்கொம்பு கல்நாருந்தான், சேரப்பாசமனகப்பொடித்துக்கொண்டு சிறப்பானபருத்திதான்மூலமெல்லாம், சேரப்பாசுட்டதனைச்சாம்பலாக்கி சீராகப்படியொன்றுதளர்ந்துகொண்டு, வாமப்பாநாலாறுபடிச்சலந்தான் வாகாகக்கலக்கியதைமூடிவையே. நாஅ

வைத்தப்பாநாலாநாள்தெளிவிறுத்து வாகாகமுன்மருந்தில்விட்டேயாட்டிக், கைத்தப்பாநல்சாமமரைத்துவில்லை கனமாகாவியில்வைத்துலரப்போட்டு, ஓத்தப்பாவோட்டில்வைத்தோடுமூடி யுத்தமனேசீலைகட்டிமுழப்புடத்திற்போடு, நீத்தப்பாநீறுமதுவெள்ளையாகும் நினைவாகப்பின்னுமந்தநீராலாட்டே. நாகூ

ஆட்டையிலேசாரமதுகாசுபோடு அடங்காதுசூடனதுகாசுபோடு, நீட்டயிலேவீரமதுகாசுபோடு நினைவாகப்பூநீறுகாசுபோடு,

காட்டையிலேநால்சாமமரைத்துக்கொண்டு நலமாகபில்லைதட்டிரவி யுலர்த்திச், சூட்டையிலேசுண்ணும்புப்பொடியில்வைத்துச் சுறுக் காகமுழுப்புடத்திற்சூட்டிவாங்கே. ருளாய

வாங்கியேசுறுக்காகவண்டநீரால் வளமாகவரைத்தொருபுட ந்தான்போடு, காங்கியேவெண்மையதுசங்குபோலாம் தளமானலிங் கமடிசுத்திசெய்து, பாங்கியேபலத்தில்பார்திலிங்கம் பச்சையாய்ச் சேர்த்துநீபொடியாய்ச்செய்து, தேங்கியேயிளநீரிற்பணந்தான்ரண் டு தீர்க்கமாய்கொண்டுவரபோம்நோய்கேளே. ருகக

கேளப்பாபெருவயிறுமகோதரங்கள் கிரிச்சனங்கள்கல்லடை ப்பு, நீளப்பாநீரருகல்நீரெறிவுதானு நீடாதுகதையொடுநீராம்பல் தானும், ஆளப்பாநீர்ச்சுறப்புவுப்பிசங்கள் அணுகாதுவயிற்றுள்ள நீர்க்கட்டும்போம், கேளப்பாநீருகல்துள்ளிவீழ்தல் தீருமப்பாப வளமதுபற்பங்கேளே. ருகஉ

பவளபற்பம்.

கேளப்பாபவளமதுபலந்தானென்று கெடியானபீங்கானில்க றுக்கிப்போடு, வேளப்பாபழச்சாறுவிட்டுநீயும் விருதானநாழிகை தானறுபதானல், நாளப்பாகழுவியதையெடுத்துக்கொண்டு நலமா னகர்ப்பூரசிலாசத்துதான், தாளப்பாசமனுகக்கல்வத்திட்டுச் சார் வானபிரண்டைச்சாறதனலாட்டே. ருகக

ஆட்டியேநால்சாமம்பில்லைதட்டி அப்பனேரவியுலர்த்தியோட் டில்மூடி, நாட்டியேமுழுப்புடத்தில்நீரும்பாரு நன்றாகப்பின்னுமந் தச்சாற்றாலாட்டிக், காட்டியேரவியுலர்த்திப்புடத்தைப்போடு கரு வானபுளியாரைச்சாற்றாலாட்டி, நீட்டியேவிருசாமமரைத்துக்கொ ண்டு நினைவாகப்புடம்போடப்பற்பமாமே. ருயச

ஆமப்பாபணவெடைதான்வெண்ணெயிலேகொள்ள அடங்கா தமேகமெல்லாமகன்றுபோகும், வேமப்பாவெனும்புருக்கியஸ்திமே கம் விருதானமதுமேகமெட்டும்போகும், தாமப்பாதேனிலேகொ ண்டாயானல் சகலரணமேலூறல்தவறிப்போகும், தாமப்பாவாயு வெல்லாங்கிழேநோக்கும் தப்பாதுமேகத்தின்தினவுபோமே.

வாதசுரக்கியாழம்.

போமப்பாசுரங்களறுபத்துநாலும் புகழாகவாதசுரமுப்பத்தி ரண்டு, ஆமப்பாபித்தசுரமிருபதொன்றும் அளவானசேத்துமமு ம்பதினென்றப்பா, வகையானமூன்றறுபத்துநாலுக்கும் நலமான வாதசுரக்கியாழங்கேளு, வேமப்பாசிறுதேக்குசுக்குதிப்பிலி விதமா ன செவியமொடுகோஷ்டந்தானே. ருகசு

தானென்ற துராலப்பை திப்பிலிமூலம் தருமான சித்திரமூலஞ் சங்குமூலம், வேனென்ற வெள்ளகுரு நிலவேம்போடு விருதான முருக்கம்வேர் கழற்சிவேரும், கானென்ற கண்டங்கத்திரிபோர் முட்டி கருவான சிற்றரத்தை பாவிலிங்கம்வேரும், தேனென்ற சிறுகாஞ்சோரிபேரரத்தை தெளிவானசதகுப்பைவிஷ்ணுகாந்திபாரே.

பாரப்பாவிந்தவகை யிருபத்தொன்றுபலம்வீதம் தூக்கியேயிடித்துநையச், சேரப்பா விருபத்தோர் பங்குபண்ணித் திறமாகவொருபங்கு சட்டியிலிட்டு, வாரப்பா மூன்றுசேர் சலந்தான் விட்டு வளமான நாழிகைதான் முப்பதானல்,ஆரப்பாவடுப்பேற்றிக் கால்சேரானல் அப்பனே வடிகொண்டு பீங்கானில்வாரே. உ௲அ

வார்த்தப்பா வாதராட்சதங் குளிகை வளமாகப் பணமொன்ன்று பொடித்துப் போட்டுத், தேத்தப்பா தேனதிலே கழஞ்சிகுத்தித் திறமாக விருநேரங் கொடுத்தாயானல், பார்த்தப்பாவாதசுரம் நடுக்குவாம் பதறுகின்ற நாளின் முறைபறந்து போகும், காத்தப்பாகடுப்புவலிகடலிலேபுக்கும் கருவானபித்தநோய்கியாழங்கேளே.

பித்த சுரக்கியாழம்.

கேளப்பா பித்தசுர மிருபத் தொன்றும் கெடியாகத்தீருமடாகியாழங்கேளு, நாளப்பா விலாமிச்சை சிறுகாஞ்சோரி நலமான வில்வவேர் பாதிரிவேர்தானும், ஆளப்பா வதிமதுரஞ் செவ்வல்லி கோஷ்டம் அப்பனே நன்னரி நிலவாவாரை, தேளப்பாசீரகமுங் கொத்தமல்லி திறமான தும்பைவேர் பேரீச்சங் காயே. ௬௰

காயோடு யானைத் திப்பிலியுமப்பா கருவான நெல்லிமுள்ளி சுக்கோ டொக்கப், பாயோடு பதினைந்து பலவீதந் தூக்கிப் பக்குவமாயிடித்து நையப் பங்குகேளு, தாயோடு விருபத்தோர் பங்குபண்ணித் தப்பாமலொருபங்கு சட்டியிலிட்டுச், சேயோடு சலமதிலே மூன்றுசேர்தான் திறமாக விட்டதிலே யடுப்பிலேற்றே. ௬௰க

ஏற்றப்பா நாழிகைதான் முப்பதானல் என்மகனே கால்சேர்தானெடுத்துக்கொண்டு, சேர்த்தப்பா தேனதிலே கழஞ்சு கூட்டத் திறமான கோரோசனைக் குளிகையொன்று, பார்த்தப்பா விழைத்த தனையிரு நேரந்தான் பதறமல் கொடுத்துவரப் பித்தசுரமெல்லாம், காத்தப்பா கண்காணு தோடிப்போகும் கருவான நாவரட்சி கழன்றுபோமே. ௬௰உ

போமப்பா நாக்கிலுள்ள முள்ளதெல்லாம் பொறுக்காத நீர்த்தாகம் போகுஞ் சொன்னேன், காமப்பா வுடம்பெரிவு சாந்தமெல்ல

லாம் நடுநடுங்கி யோடுமடா வாயூறலெல்லாம், சேமப்பா சிரசிலுள்ள பித்தமெல்லாம் சீக்கிரத்தி லிரங்கிவிடுஞ் சிரோபாரம்போம், ஆமப்பா சேத்துமசுரம் பதினொன்றுந்தான் அப்பனே தீருதற்குக் கியாழங்கேளே. ௯௨௩

சேத்தும சுரக்கியாழம்.

கேளப்பா சுக்குதிப்பிலி கிராம்பு கெடியான துராலப்பையைக் கிராகாரம், காளப்பா கருமுள்ளி கடுக்காபோடு கனத்த வாடாதோடை கற்பூரவள்ளி, நாளப்பா முந்திரிகை கண்டங்கத்திரி நலமான பதினொன்று வகையைக்கேளு, ஆளப்பா பலவீதம் நிறுத்துக்கொண்டு அப்பனே யிடித்துரையைப் பங்குகேளே. ௯௨௪

பங்கென்ன பதினைந்து பண்ணிக் கொண்டு பக்குவமா யொரு பங்கு சட்டியிலிட்டுப், பங்கென்ன ரண்டுபடி சலந்தான்வாரு பதறுமே முப்பதுநாழிகை யூறினக்கால், பங்கென்ன வடுப்பேற்றிக் கமலமாகப் பதறாமல் கால்சேர்தா னிடித்துக்கொண்டு, பங்கென்ன தேனிலே கழஞ்சுகுத்திப்பாரப்பாசந்திரேகம் பணந்தான்போடே.

போட்டப்பா கோரோசனைக் குளிகையென்று புகழாகக்கலக்கியிரு நேரங்கொள்ளக், காட்டப்பாகம்ம லெல்லாங்கீழே சாடுங்கனமான சேத்தும சுரங் காணாதோடும், கேட்டப்பா விரும லெல்லாம் க்ஷணத்தில் தீரும் சிறுகடுப்பு குத்துவலி சேராதோடும், காட்டப்பா வலியிசுவும் கலங்கியோடுங் கருவான சேதிஇன்று சொல்லக்கேளே. ௯௨௬

சன்னி பதின்மூன்றுக்கும் பெயர்.

கேளப்பா சன்னிவகை பதின் மூன்றுக்கும் கெடியான நாமமது சொல்லக்கேளு, நாளப்பா தாந்திரிக னந்தகனுமாகும் நலமான சீதாங்க முருத்திரதாம், வேளப்பா சித்தவிப் பிரமையோடு விதமான் கண்டகுப சங்கருணியாகம், ஆளப்பா வீக்கனுதம் பக்கநேத்திரம் அருளான ரத்தபுஷ்டி விருக்கி தாகமாமே. ௯௨௭

தோஷ மேழுக்கும் பெயர்.

ஆமப்பா பிரலாபம் பீஙியாசம் அப்பனே சந்நிவகை பதின்மூன்றுக்கும், வேமப்பா தோஷமென்ற தேழுங்கேளு விருதான வுஷ்ணதோஷம் ரத்ததோஷம், நாமப்பா நீர்தோஷ மஸ்திதோஷம் நலமான கொடிதோஷம் வலிதோஷந்தான், காமப்பா கையோக தோஷத்தோடு சதுரான தோஷவகை யேழுந்தானே. ௯௨௮

தானென்ற சந்நிவகை பதின் மூன்றுக்கும் தளமான தோஷவகை யேழுக்குந்தான், நானென்ற மருந்துவகைமுன்னே சொன்னோம் நலமான சன்னிக்குத் தைலஞ்சொன்னோம், தானென்ற மாத்தி

ரையுங்கலிக்கசொன்ஞேன் கருவானவைத்தியத்தில்மனதைமூன்றி, வானென்றவைத்தியத்தைப் பார்த்தாயாகில்மைந்தனே தன்வந்திரிக்கொப்பாம்பாரே. ௩௨௬

கெந்தி செந்தூரம்.

பாரப்பாசெந்தூரஞ்சொல்லக்கேளு பண்பானகெந்தியறப்பலந்தான்வாங்கி, நேரப்பாவோட்டிலிட்டிருக்கும்போது நேருனசரம்பலந்தானுவிட்டே, காரப்பாவறுத்தாக்கால்பற்பம்போலாம்சாதகமாய்ப்புதுச்செங்கல்பாக்குப்போலுடைத்து, வாரப்பாபாண்டத்தில்போட்டுப்பின்பு வளமானகழிவுப்புசோரைத்தால்வாங்கே.

வாங்கியேமுன்பற்பங்கல்லுப் பக்கலந்து வாகாகப்பாண்டத்திற்றாவிநீயும், தாங்கியமேல்பானை கவிழ்த்து மூடித்தப்பாமலெழுசீலைமண்ணுசெய்து, சாங்கியேகாயவைத்தடுப்பிலேற்றிச்சாதகமாய்க்கமலகாடாக்கினியினலே, தேங்கவேநாற்சாம மெரிட்டாக்காலதிறமாகமேல்தூறில் பற்பமாமே. ௩௩௧

ஆமப்பாசூதபற்பம் பலந்தானு அப்பனேகெந்திபல மறையுங்கூட்டி, நாமப்பாவரிதாரம்பலந்தான் தூக்கிநலமாகப் பொடிசெய்துகும்பியிலேபாதி, வேமப்பபோட்டதிலே யேழுசீலைசெய்துவிருதானரவியிலேகாயப்போட்டுத், தாமப்பா தாளிக்குள்நாலுவிரல்மண்தான்தப்பாமல்பாதிமேல் குப்பிவையே. ௩௩௨

வைத்தப்பாகழுத்தளவுமணலைக்கொட்டிவாகாகமூத்தீயுஞ்சாமம்நாலு, கைதப்பாவெரியிட்டேயாறிப்பார்த்தால் கசகாதுதேங்காய்போல்செந்தூரமாகும், நைத்தப்பாவுடைத்தெடுத்துப் பதனம்பண்ணுநலமானவியாதியெல்லாநாடாதோடும், மைத்தப்பாசெந்தூரம்பலந்தானென்று மைந்தனேமுன்பற்பம்பலந்தானலே. ௩௩௩

நலமானகெந்திபலமரைதான்போட்டு நலமானதாரங்கால்பலமுமாகும், காலானகல்லத்தில்பொடித்துநீயுங் கசகாமல்குப்பிக்குப்பாதிபோட்டுச், சேலானசீலையோரேழுஞ்செய்து திறமானவாய்க்குச்செங்கல்தேய்த்துப்போட்டு, வாலானசீலையோரேழுஞ்செய்துமைந்தனேவாலுலகையி லடுப்பிலேற்றே. ௩௩௪

ஏற்றியேநாற்சாமமுத்தீயாற்போட்டு எடுத்துப்பார்செந்தூரமருணன்போலாம், பாத்தியேயிப்படியே பத்துமுறைசெய்துபாங்கானசெந்தூரஎடுத்துகொண்டு, தேத்தியேசெந்தூரம்பலந்தானு திறமானபற்பமது பலந்தானு, ஆத்தியேகெந்தியது பலந்தான்ரண்டுஅப்பனேதாரமது பலமரையுமாமே. ௨௩௫

ஆயப்பாசிலைகால்தான்தாளகங்கால்அப்பனே கல்வத்திற்பொடித்துக்கொண்டு, நாமப்பாசெம்பரத்தம்பூச்சாற்ருலே நலமானநா

ற்சாமமாட்டிக்கொண்டு, தாமப்பாபூவரசன் பூநாற்சாமம்தப்பாமல்
தக்காளிபழச்சாறுகேளு, சமப்பாவிருசாமமாட்டிக்கொண்டு சமர்
த்தாகப்பொற்கையான்சாறுகேளே. ௱௬௬

கேளப்பாசாமம்ரண்டாட்டிக்கொண்டு கெடியானரேக்கதிலே
பலமும்போட்டு, நாளப்பாவரைத்துருட்டிப் பொடியாய் செய்துந
லமானகுப்பியிலேபரைதான்போட்டு,கேளப்பாசீலையோரேழுஞ்செ
ய்துவெகுசுறுக்காய் வாங்கிச்செங்கல்தேய்த்துப்போட்டு, ஆளப்ப
வாய்க்குமந்தச்சீலைசெய்து அப்பனேவாலுவகையிலேற்றியாட்டே.

ஆட்டப்பாசாமம்நால்தீபமாக அப்பனேசாமம்நால்கமலன்னி,
மூட்டப்பாகாடாக்கினிசாமமெட்டு மூதண்டபிருவாணிபூசைசெய்
து, காட்டப்பாவாறினபின் னெடுத்துப்பாருகதிர்போலே செந்தூ
ரங்கண்கொள்ளாது, நீட்டப்பாலோகத்தில்நூற்றுக்கொன்றுகிலைக்
குமடாவர்னமது பத்துதானே. ௱௱௮

பத்தாகுத்தேகத்தில்குன்றியெடைதேனில் பக்குவமாய்வருட
மொன்றுகொண்டாயானால், வித்தாகும்விந்துவது கீழ்நோக்காது
விட்டுவிட்டுச்சரீரத்தோரமாசிகட்டும், அத்தாகுஸ்திரீகளுட னுவ
போகத்தால்அப்பனேநூறுபேர் தோற்றுப்போவார், சித்தாகுந்தே
சமது சிவந்துமின்னும் செடமிறுகிவயிரம்போ லாகும்பாரே.

காலகண்டமேகநாராயணசெந்தூரம்.

பாரப்பாகாலகண்டமேகநாராயணன்பரிவானசெந்தூரஞ்சொ
ல்லக்கேளு, சேரப்பா ரசபற்பம்பலந்தானெட்டுத்திறமான கந்தக
மோபலந்தானப்பா, வாரப்பாதாளகமோ பலந்தான்ஒன்று வளமா
னசிலையரைசெந்தூரமறைதான், ஆறப்பாலிங்கங்கால் வெள்ளிகால்
தானப்பனேவள்ளீயம் பலந்தானென்றே. ௱௭௰

ஒன்றானநாகமறைவங்கங்கால்தா னுத்தமனே செம்பதுவுங்க
ழஞ்சிரண்டு, நன்றானதங்கமதுகழஞ்சுவொன்று நாட்டப்பா நாபி
யொருபலமும்நீதான், குன்றுமற்பொடிசெய்தே யரைப்புகேளுகூ
றான பொற்கையான்சாமம்நாலு, சென்றானகுமரிப்பூச்சாமம்நாலு
சேர்மூருக்கம்பூச்சாறுசாமம்ரண்டே. ௱௭௧

ரண்டானபாதிரிப்பூச்சாறுசாமம் ரண்டாகும் பழச்சாற்றில்
செம்பரத்தம்பூபோட்டு, வென்றாகவெளுத்தபின் யெறிந்துபோட்
டுவிருதாக விருசாமமெடுத்தேயாட்டு, சென்றான கரவியுலர்த்திப்
பொடிதான்செய்துசேரப்பாகுப்பிக்குச்சீலைசெய்து, வின்றப்பாகு
ப்பிக்குப்பாதிபோட்டு விருதாகவாய்மூடிச்சீலைசெய்யே. ௱௭௨

செய்தப்பாவாலுகையிலடுப்பிலேற்றித் திறமாகத்தீபாக்கினி எட்டுசாமம், செய்தப்பாகமலமோரெட்டுசாமம் தீர்க்கமாய்காடாக் கினிசாமமெட்டு, செய்தப்பாதீயாற்றியீசாணியத்திற் சேர்க்கறியும துவேடுபூசைபண்ணு, செய்தப்பாகுப்பிதனைவாங்கிப்பாரு திறமா கக்கருஞ்சிவப்பாய்ச்செந்தூரமாமே. ௩௪௩

ஆமப்பாபணவெடைதான்தேனிற்கொள்ள அணுகாதுகுன்ம மெட்டும்பீலியாறும், போமப்பாபெருவயிறுமகோதரங்கள் பொல் லாதசத்திவிம்மல்நீரடைக்கல், காமப்பாவிரைத்ததொருசோகைப்பா ண்டு கனமானநீர்க்குத்தல்காணுதோடும், சாமப்பாவக்கினியாமந்த மெல்லாம் கட்டுண்டுபோகுமடாசேதிகேளே. ௩௪௪

ரசலோகச்செந்தூரம்.

சேதியொன்றுசொல்லுகிறேன்புலத்தியனேஐயா திறமானரச லோகச்செந்தூரந்தான், ஆதியென்றசூதபற்பம்பலந்தான்ரண்டு அ ப்பனேலோகமென்றுகாக்குமரைகூட்டி, வாதியாம்லிங்கமரைவெ ண்காரமரைதான் வளமாகச்சாருங்கல்நாபிகால்தான், சாதியென்ற கெந்தியினுற்செந்தூரங்கால்தான் கனமாகப்பொடிசெய்தேயரைப் புகேளே. ௩௪௫

கேளப்பாபழச்சாற்றுல்சாமம்நாலு கெடியாகப்பொற்கையா ன்சாரம்ரண்டு, நாளப்பாசொறுப்புகால்சாமம்ரண்டு நலமானகுமரி ப்பூச்சாமம்ரண்டு, தாளப்பாசெம்முள்ளிசாமமொன்று தனமாகவே யரைத்துரவியிற்போட்டு, வேளப்பாசெய்ததனைக்குப்பிக்கேற்றி வி தமானவாய்மூடிவாலுகையில்வையே. ௨௪௬

வைத்தப்பாவடுப்பேற்றியெட்டுசாமம் வாகாகத்தீபாக்கினிகம லங்கேளு, கைத்தப்பாசாமமெட்டெரித்துக்கொண்டு கனமானகா டாக்கினிசாமமெட்டு, வித்தப்பாவாறவிட்டுடைத்துவாங்குவிருதா கச்செங்கல்நிறமாகக்காணும், பைத்தப்பாபொடிசெய்துபணந்தே னிலுண்ணப் பறக்குமடாகாமாலைபாண்டுதானே. ௩௪௭

தானென்றபித்தநோய்தலைகெட்டோடும் தப்பாதுவாதமென் றதெண்பதும்போம், நானென்றசன்னியெல்லாம்நாடாதோடும் நல மானவாயுவென்றதெல்லாந்தீரும், கானென்றதயிலுள்ளவியாதியெ ல்லாம் கடல்புக்குஞ்சூலைபதினெட்டுந்தீரும், மானென்றதேனிலே பத்துநாள்கொள்ள மதுமேகந்தீருமடாவின்னங்கேளே. ௩௪௮

கேளடாசகர்ப்பூரபற்பங்கேளு இருபையாய்ச்சுத்தாசஞ்சுத்திசெய்து, நாளடாகல்லுப்புகைபோர்பண்ணி நலமானரவியிலேகாயப்போட்டு, கேளடாசட்டிக்குள்ளுப்பைப்போட்டுத் திறமானமேற்சட்டிகொண்டுமூடி, தாளடாவெழுசீலைமண்ணுஞ்செய்து தனமானரவியிலேகாயப்போடே. ௩௪௯

போட்டப்பாவடுப்பேற்றிக்கமலமாகப் புகழாகநால்சாமமெரித்தாயானால், நீட்டப்பாதேங்காய்போலிருக்கிற்கும் நிசமாகவதையெடுத்துத்தூக்கிக்கொண்டு, காட்டப்பாபலம்ருனுபீங்கானுக்குங்கருவானவெற்றிலையின்சாற்றில்விட்டு, ஆட்டப்பாரவிமுகத்திலுலர்ந்தபின்பு அப்பனேநீயஞ்சுதரம்சாறுவிட்டே. ௩௫௰

விட்டப்பாரவியிலேயுலர்ந்தபின்பு விருதாகப்பொடிபண்ணிக்குப்பிக்கிட்டு, விட்டப்பாவரைவாசிமட்டம்போட்டு விளக்கியேயெழுசீலைமண்ணுஞ்செய்து, விட்டப்பாவாலுகையில்வைத்துநன்றாய்விதமாகவெண்சாமமுத்தியிட்டு, விட்டப்பாவாறியபின்னுடைத்துப்பாரு விருதானபற்பமதையெடுத்துக்கொள்ளே. ௩௫௧

கொள்ளப்பாநாலுபலமெடுத்துக்கொண்டு குரிப்பானபற்பமதுபலநாள்தூக்கி, நள்ளப்பாபொடிசெய்துவெற்றிலையின்சாறு நலமாகவிட்டதிலேரவியுலர்த்தி, புள்ளப்பாமேருவிலேபரைவாசிபோட்டு விருதானவாலுகையிலடுப்பிலேற்றி, கள்ளப்பாமுத்தியுஞ்சாமமெட்டு கருகாமலெடுத்தாறிபின்னுடைத்துபாரே. ௩௫௨

பாரப்பாமுன்போலேபத்துத்தொந்தம் பரிவாகவெடுத்தெடுத்துப்பதனம்பண்ணி, காரப்பாபணவெடைதா நெய்தானிற்றுன்சார்வாகமண்டலங்கால்கொண்டாயானால், சேரப்பாசூலைபதினெட்டும்தீருந் திறமானகிரந்திபுண்புரைகள்தீரும், வேமப்பாமேலூறல்வஸ்திரணமெல்லாம் வெவ்வேறாய்தீருமடாவின்னமங்கேளே. ௩௫௩

காரீயச்செந்தூரம்.

கேளப்பாகாரீயசெந்தூரந்தான் கெடியானகாரீயம்பலந்தானுறு, நாளப்பாபழச்சாற்றிலுருக்கிச்சாய்த்து நலமானநல்லெண்ணெய்க்கோமயத்திலேழு, தாளப்பாகோசலத்திற்கொள்ளுச்சாற்றில் தனமானகாடியிலேயுருக்கிச்சாய்த்து, ஆளப்பாவகையொன்றுக்கேழுதரஞ்சாய்த்து அப்பனேபலநாற்சட்டியிலேவையே. ௩௫௪

வைத்தப்பாபாகமதுகால்தான்கூட்டி வயமாகவறுக்கையிலாவாரைப்பட்டை, தைத்ததிலேநறுக்கியேயுடைத்துக்கொண்டு நல

மாகப் போட்டதிலே வறுப்பாயப்பா, நைத்ததிலே நாற்சாமம் வறுத்தாயானால் நலமானசெந்தூர மருணன் போலாம், பைத்திலே செந்தூர மெடுத்துக்கொண்டு பத்திரமாய் சீசாவிற் பற்பமாமே. ஙடு

ஆமப்பா நாற்சாமம் வறுத்துப்போட்டு அப்பனே நாற்சாமம் சும்மாய் வைத்து, தாமப்பாசெந்தூர மெடுத்துக்கொண்டு தளமான தேனெய்யில் பணந்தா னுண்ணப், போமப்பா பிரவியநோய் பெரும் பாடெல்லாம் பொல்லாத கிரிச்சனங்கள் போகுஞ் சொன்னேன், காமப்பா நீரிழிவு கடலேபுக்கும் கலங்காதே கல்லடைப்பு தெறிக்கும் பாரே. ஙுசு

பாரப்பா பூரணச் சந்திரோ தயமென்றால் பறக்குமடா வியாதியெல்லாஞ் சொல்லக்கேளு, தாளப்பா ரசமிரண்டு சிலையரைக்கால் தவறாமல் வெகுசுறுக்காய்றேக்கதவுப் பலந்தானென்றுகாரப்பா சரக்கெல்லாங்கல்வத்திட்டு சககாமபொடித்துமனமொன்றுபட்டே

பட்டப்பா னரைபங்குச்சாறு கேளு பண்பாக பழச்சாற்றிற் செம்பரக்கம் பூப்போட்டு கன்றப்பா வெளுத்ததிலே நாள்தான்சென்றால்கலங்காதேபிழிந்தெறிந்துமருந்தில்விட்டுவின்றப்பாசாமமேயின்பதாகும்வேளாதபொற்கையானிருபத்தொன்றும், சென்றப்பாவரைக்கையிலே துருசுகேளுதிறமாகபணவெடைதான்கூடப்போடே.

போட்டப்பாரவியுலர்த்திப் பொடிதான்செய்து புகழானமேருவிலேயரைவாசிபோட்டு, காட்டப்பாசீலையோரேழுஞ்செய்துகனமானவாலுகையிலடுப்பேற்றி, நீட்டப்பாதீபமோ ரெட்டுச்சாமம்நிலையானகமலவன்னியெட்டுச்சாமம், ஆட்டப்பா காடாக்கினியாறுசாமம்அப்பனேசலாகையிட்டுக்கிண்டிப்பாரே. ஙுசூ

யாரப்பா சலாகைமுகங்கறுப்புகண்டால் பக்குவமென்றேதீயையாற்றிப்போட்டு, சேரப்பாபூரணச்சந்திரனைப்போலே திறமாசுக்காந்தியதாயிருக்கும்பாரு, வாரப்பா வடைத்தெடுபதுபலமேதுக்கிவகையாகப்பொடிசெய்து கஸ்தூரிகேளு, ஆரப்பாகழஞ்சியொன்றுகூடப்போடு அப்பனே கோரோசினைதான் கழஞ்சியாமே.

ஆமப்பாகூடவிட்டுப்பொடிதான்செய்து அப்பனேபரணிதனிலடைத்துக்கொண்டு, சேமப்பாபணவெடைதான்தேனிற்கொள்ளதீராத சன்னியென்ற மூலந்தீரும், வேமப்பா தோஷமென்ற தேழுந்தீரும் வெருளாக சேத்துமநோய் தொண்ணூறுறும், வாமப்பாகீழ் நோக்கி வலியுந்தேகம் வளமாக தேவியைநீ தியானஞ்செய்யே

செய்யவேபூரண சந்திரோ தயமென்றால் திடுக்கிடுமே சுரமென் பதறுபத்தினாலும், கையவே காசமெட்டுங் கனமான மேகநோயிருபத்தொன்றும், பையவேதரமிழங்காளகன்றுபோகும் பாரப்பாதேகமதுசிவதுந்துமின்னும், வையவேவருடமொன்று பணவெடைதான்கொள்ள வளமானதேகமது சந்திரன்போலாமே. ௩௯௨

ஆமப்பாகோங்கின்பூ சூரணமேசெய்து அப்பனே பூரணச்சந்திரோதயம்வைத்து, நாமப்பாமண்டலந்தான் மூன்றுதென்றால்நலமானதேகமோ அருணன்போலாம், போமப்பாசரஸ்வதிதானிருத்தஞ்செய்வாள் புகழானசுரமெல்லாம்பாடலாங்கேள், காமப்பாலிறுகுமடா சையோகத்தில்கருவான விந்துவதுவீழதென்னே. ௩௯௩

என்னவேபத்தியந்தான் பாலுஞ்சோறும் இதமானயாவினெய்சிறுகீரையாகும், பன்னவேபொன்னாங்காணிபுளியாரையாகும்பாவதனை வண்டையுடன்பீர்க்குமாகும், கன்னவேமிளகுசீரகமுமாகும் கறியென்றால்முள்ளித்தூதுளையுமாகும், தன்னவேபருப்புக்குள்பாசியாகும்தளமானசந்தனாதித் தைலமூழ்கே.

மூழ்கவேவியாதியெல்லாங் கடலேபுக்கும் முக்கியமாயசத்தியர்க்குச்செபந்தான்பண்ணு, நெகிழவேதியானமது[illegible]லையாய்ப்பண்ணுநோகத்தேவியைத்தான் பூசைபண்ணு, திகழவேசிவன்தன்னைத்துதியேபண்ணுதீராதவியாதியெல்லாந் தீர்ந்தேபோகும். மகிழவேவைத்தியனிவ்வகையாய்ச்செய்தால் மண்டலத்தில் லீசனவனாகுமுற்றே.

வைத்தியரத்தினச் சுருக்கம்

முற்றிற்று.